www.tamilarangam.net

# KATPAHAM

# கற்பகம்

## 10 ÅR



NR. 8 01. 05. 1996 இதழ் 8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**KATPAHAM**
**கற்பகம்**
**ISSN 0909-9697**

**Readaktion:**
Troels Johansen
(Ansv.)
**Readaktion:**
M.Shan
**Readaktionhjælp**
K.Akilan
David George
T.Kugan
S.Paramaswaran
T.Selvakumar

பத்திரிகைப் பொறுப்பாளர்:
ற்றோல்ஸ் ஜோகான்சன்
பதிப்பக பொறுப்பாளர்:
எம். சண்
உதவியாளர்கள்:
க.அகிலன்
ரி.குகன்
சு. பரமேசுவரன்
டேவிட் ஜோர்ஜ்
து.செல்வக்குமார்

## Inhold
## உள்ளடக்கம்

Jubilæum
பத்து வருட...
பொதுக்கூட்டம்
Fremtidens Demokrati
எதிர்கால ஜனநாயகம்
Dragen...
இடம்
தமிழரும் மதப்...
விமர்சனம்
பச்சைக்கிளியே..
சுதந்திரம்
ஔவையார்
விடிபொழுது
DF. விசேட பயிற்சி
கடவுச்சீட்டு
சிறுவர் பகுதி...
இந்து சமயத்தின் ...
நிதி...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Tanker ved et 10 års jubilæum.

Normalt er et 10 års jubilæum ikke ret meget - ikke noget at fejre. Alligevel synes jeg, at det er på sin plads at stoppe op og tænke lidt på fortiden.
10 års virke i vores forening indeholder nemlig mange ting.

Når jeg tænker efter, hvad der er sket i de 10 år, vi har haft vores forening, så er det ganske meget. Mange tamiler har været i forbindelse med foreningen.
De har brugt foreningen og bestyrelsen på mange måder:; for at hente hjælp og vejledning i mange dagligdags problemsituationer lige fra børnepasning, spørgsmål om kontanthjælp, boligvanskeligheder, arbejdsmarkedsspørgsmål til vanskeligheder ved familiesammenføring eller ved skatteproblemer. Rækken af sager er lang.
Fra de 10 års virke kan jeg tænke på aktiviteter med information gennem aviser og radio; udstillinger og konferencer. Initiativ til at samle tamilske foreninger i en paraplyorganisation og til at repræsentere tamilske interesser på landsplan hos politikere i Folketinget, over for kommuner og organisationer, i INDSAM og i flygtningesammenhænge; foreningen har været i kontakt med asylcentre og har brugt advokater og gode forbindelser. Nyttige aktiviteter - alle sammen for at løse problemer og øge kendskab til den tamilske situation.

Men jeg husker også, at foreningen har også været basis for et frodigt socialt samvær. Festivals med deltagelse af tamiler fra store dele af landet, fordi der har været mulighed for at møde slægtninge og venner, som man ikke ser til daglig. Også muligheder for at opretholde kulturaktiviteter som dans, sang, musik, litteratur eller selve sproget - alt sammen helt nødvendige dele af et menneskes identitet. Identitetsudvikling er af grundlæggende betydning for alle mennesker, og mange mennesker har problemer med at skabe en sund og hamonisk udvikling. Som flygtning kan der være ekstra vanskeligheder, som vi danskere normalt slet ikke tænker på.
De følelsesmæssige, sociale og holdningsmæssige sider af personlighedsudviklingen er utroligt vigtige. Derfor er de



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



kulturaktiviteter, som vi har dyrket i foreningen f.eks. ved festivalerne, så nødvendige at holde fast ved. De kan nemlig meget nemt drukne i dagligdagen, fordi der er andre alvorlige problemer at tænke på. Langt væk fra Sri Lanka under fremmede og ikke altid venlige himmelstrøg er det derfor vigtigt at bevare og værne om dette forum at mødes i; her spiller foreningen en stor rolle.

Af og til har interessen for foreningen og antallet af betalende medlemmer måske ikke, som vi kunne ønske det i bestyrelsen. Det er jo egentligt et problem, for først hvis en forening ikke eksisterer længere, vil man måske opleve den betydning. Min opfordring skal derfor være, at flest mulige tamiler melder sig ind og støtter foreningen. I samme forbindelse må jeg indrømme, at der er et punkt, hvor foreningen ikke har levet op til intentionerne: vi har aldrig kunne tiltrække tilstrækkeligt mange danskere som medlemmer. Det er en skam, for netop det gensidige samvær er nødvendigt for at udvikle forståelse for hinanden.

Fra de 10 år husker jeg generalforsamlinger, hvor der har været stor enighed - nærmest den rene idyl. Til gengæld har vi også haft generalforsamlinger, hvor man har råbt højt, endda meget højt. Man har argumenteret vildt og ulogisk, nærmest fjendtligt, og nogle tamiler har været på nippet til at komme i håndgemæng. Det har undertiden undret flere af os danske, fordi vi - måske fejlagtigt - har opfattet tamiler som tamiler med en fælles interesse som flygtninge. Men sådan har det ikke været.

Derfor har vi desværre også oplevet, at uenigheden er blevet så stor og samarbejdet så ringe, at foreningen er gået i stykker. Snarere end at kæmpe for fælles tamilske interesser bekriger tamiler andre tamiler langt fra Sri Lanka. Det er lidt svært for danskere at forstå.

Selv om relationerne mellem danskere og tamiler bliver bedre og tættere, vil der til stadighed være brug for en tamilsk forening som vores. Jeg skal derfor opfordre til fortsat interesse for en livskraftig forening.

*Troels Johansen*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பத்து ஆண்டுகள் பூர்த்தி பற்றி ஒரு நோக்கு

*பத்து ஆண்டுகள் பூர்த்தியை பெரிதாக எடுப்பதுமில்லை விழாக்கள் கொண்டாடுவதற்குமில்லை. இருந்தாலும் கடந்தகாலத்தைப்பற்றி சிந்தித்துப்பார்க்க விரும்புகிறேன்.*

## பத்து வருடங்களில் எங்கள் ஒன்றியமானது பல விடயங்களை சாதித்துள்ளது.

பத்து வருடங்களில் எங்கள் ஒன்றியத்தில் என்ன நடந்துள்ளது என்று சிந்தித்துப்பார்க்கும் போது பல விடயங்களைக்காணக் கூடியதாகவுள்ளது. பல தமிழர்கள் பல வழிகளில் ஒன்றியத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள்.

அவர்கள் எங்கள் ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினரை பலவழிகளில்நாடி அன்றாடபிரச்சினைகள், பிள்ளைகள்பராமரித்தல், சமூகஉதவிப்பணம், இருப்பிடவசதி, தொழில், குடும்ப ஒருங்கிணைப்பு, வரிப்பிரச்சினை போன்ற பல விடயங்களில் உதவியும் ஆலோசனையும் பெற்றுள்ளார்கள். இங்கு குறிப்பிடாத பல விடயங்களும் உள்ளன.

கடந்த பத்து வருடங்களில் வானொலி நிகழ்ச்சிகள், சஞ்சிகை வெளியீடு, கருத்தரங்குகள் கலைவிழாக்கள் போன்ற பல செயற்பாடுகள் நடைபெற்றுள்ளது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலகுவான முறையில் தீர்ப்பதற்கு உதவியாகவிருக்கும் என்ற அடிப்படையில் தமிழ்-டெனிஸ் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பை ஆரம்பிப்பதற்குரிய முயற்சியை எங்கள் ஒன்றியமே முன்வைத்து ஆரம்பித்தது. இதன் நோக்கம் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு டெனிஸ்பாராளுமன்ற உறுப்பினர்களை, அதிகாரிகளை, உள்ளூராட்சிசபைகளை அணுகுவதும் சரியான தகவல்களை வழங்குவதுமாகும். இதற்கு மேலாக அகதி அந்தஸ்து கோரும் தமிழ்மக்களின் நிலைமையை அரசிற்கு எடுத்துக் கூறுவதற்கு சுலபமாக அமையும் என்பதாகும். ஒன்றியமானது டென்மார்க்கில் அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்களுடனும், அவர்களின் சட்டத்தரணிகளுடனும் தொடர்புகளை கொண்டுள்ளது. பயனுள்ள செயல்பாடுகளினால், பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளலாம் அத்துடன் அறிவையும் வளர்த்துக் கொள்ளலாம்.

ஒன்றியங்கள் நிறைவளர்த்தியுள்ள சமூக இணைப்பின் அடிப்படையாகும் என்பதனை என்னால் கூறக்கூடியதாகவுள்ளது. எங்களால் நடத்தப்படும் கலை கலாச்சாரவிழாக்களுக்கு, டென்மார்க்கின் பல பாகங்களில் இருந்தும் பல தமிழர்கள், பங்குபற்றுபவர்களாகவும் பார்வையாளர்களாகவும் வருகைதருகிறார்கள் இவ் விழாக்களில் தமிழர்கள் அன்றாடம் சந்திக்கமுடியாத இனத்தவர்களையும், சினேகிதர்களையும் சந்திக்கிறார்கள். ஒருவர் தன்னுடைய அடையாளத்தை பேணிப்பாதுகாக்க, மொழி, கலாச்சாரம், கலை, இயல், இசை, நாடகம், இலக்கியம் என்பன முக்கியமானவை இதனையும் ஒன்றியத்தினூடு பெறக்கூடியதாக இருக்கின்றது. எல்லாமனிதர்களுக்கும் அடையாள அபிவிருத்தியானது அடிப்படையில் அர்த்தமுள்ளதாகும். பலர் ஆரோக்கியமான, இணக்கமான முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அகதிகள் இப்படியான ஒரு பிரச்சினையை எதிர் நோக்குவதை டெனிஸ் மக்கள் சிந்தனையில் எடுத்துக்கொள்வதில்லை.

உணர்வுபூர்வமான, சமூக-கருத்துபூர்வமான, தனிநபர்தன்மை அபிவிருத் தியானது மிகமுக்கியமானதாகும். ஆதலால் ஒன்றியமானது கலாச்சார விழாக்களை நடத்துகின்றது. இப்படியான கலாச்சாரவிழாக்கள் முக்கியமானவை. ஆனபடியால் கலாச்சாரவிழாக்களை நடத்த வேண்டும். தினசரி கலாச்சார செயற்பாடுகளில் ஈடுபடவோ, பயிற்சி பெறவோ முடியாது உள்ளது ஏன்எனில் வேவ்வேறு அன்றாடபிரச்சினைகளை சிந்திக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டியுள்ளது. தாய்நாட்டில் இருந்து பிரிந்து அதிகூடிய தூரத்தில் வேறுபட்ட கலாச்சாரமுடையநாட்டில வாழ்கிறோம். நாம்வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டில் எப்பொழுதும் எங்களுக்கு சாதகமான நிலைமை தோன்றுவதில்லை. ஆதலால் பொது செயற்பாடுகளை பேணிப்பாதுகாக்க ஒன்றியமானது மிகமுக்கியமானதாகும்.

இடைக்கிடை அங்கத்துவ பணம் கட்டிய அங்கத்தர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுவது வியப்பானவிடயமல்ல. ஆனால் நிர்வாகசபை உறுப்பினர்கள் இதனை கவனத்தில் கொள்ளலாம். உண்மையான பிரச்சினை என்னவெனில் ஒன்றியமானது நீண்டகாலம் நிலைக்கவில்லை என்றால் அதன் நோக்கத்தை கொள்ளவில்லை என்பதாகலாம். பல தமிழர்கள், ஒன்றியத்தில் சேர்ந்து ஆதரவு அளிக்கவேண்டும் என்பது எனது கோரிக்கையாகும். இது தொடர்பாக நான் ஒத்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் ஒன்றியமானது நோக்கத்தை முன்எடுத்துச் செல்லவில்லை. இதனால் டெனிஸ் அங்கத்தவர்களை போதுமான அளவு கவரவில்லை. இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். பரஸ்பரமான முறையில் ஒன்று கூடுதல் முக்கியமானது ஏனெனில் ஒருவரைஒருவர் புரிந்து கொள்வதை விருத்தி செய்யமுடியும்.

பத்துவருட காலத்தில் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கருத்து ஒற்றுமை இருப்பதை காணக்கூடியதாகவிருந்தது. சிலவருடங்களுக்கு முன்பு நடந்த சில விடயங்கள் தமிழ் அங்கத்தவர்களுக்கிடையில் வேற்றுமை இருப்பதை தெளிவுபடுத்தியது. சில பொதுக்கூட்டங்களில ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடுகாரணமாக உரத்துசத்தமிட்டுள்ளார்கள். சில விவாதங்கள் மூர்க்கத்தனமான, நியாயமற்ற, பகமையை ஒத்த விதண்டாவாதங்களாக இருந்தன. சில தமிழர்கள் படிப்படியாக கைகலப்பு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அகதிளாக இங்கு வந்த தமிழர்களுக்கு உதவவேண்டும் என்றபொது நோக்குடன் முன்வந்த டெனிஸ் மக்களில் பலருக்கு இப்படியான விடயங்கள் சில சமயங்களில் நாங்கள் பிழையாக வந்து விட்டோமோ என்ற எண்ணத்தை தூண்டவைக்கின்றது. ஆனால் அப்படியாக இருக்கக்கூடாது.

துரதிஸ்டவசமாககருத்து வேறுபாடு அதிகரித்து ஒன்றியமானது பிரிந்து விட்டது. தமிழர்கள் தாய்நாட்டில் இருந்து வெகு தூரத்தில் வாழ்ந்து கொண்டு தங்களுக்குள் பிரச்சினைப்படுவது அல்லது மோதிக் கொள்வதிலும் பார்க்க தங்களுக்கு பொதுவாக உள்ள பிரச்சினையை தீர்க்க போராடவேண்டும். டெனிஸ் மக்களுக்கு இதனை விளங்கிக்கொள்ள சிரமமாக இருக்கின்றது.

தமிழ்மக்களுக்கிடையே பல வேறுபாடுகள் இருந்தும் டெனிஸ் மக்களுககும் தமிழ் மக்களுக்குமிடையில் சிறந்த நெருங்கிய உறவுகள் ஏற்பட்டுவருகின்றது. தொடர்ச்சியாக இந்த உறவுகளை வளர்ப்பதற்கு எங்கள் ஒன்றியத்தினை உபயோகிக்க முடியும். அதனால் எங்கள் ஒன்றியமானது சக்தி வாய்ந்ததாக தொடரவேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.

Troels Johansen

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

*திரு.செ.வே. கமலநாதன் எழுதும்*

**புலம்பெயர் நாடுகளில் இலங்கைத் தமிழர்களின் தொழில் துறைகள் என்னும் தொடர் ஆராய்ச்சிக்கட்டுரை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியத்தின் வருடாந்த அறிக்கை 1995 – 1996.

தமிழ் டெனிஸ் மக்களிடையே பெரியளவில் புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒன்றியமானது 1986 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1986 ம் ஆண்டு ஒன்றியத்தை ஆரம்பித்தவர்களும், அதன் பின் தங்களை ஒன்றியத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டவர்களும் இன்றும் இந்த ஒன்றியத்தில் அங்கத்தவர்களாக இருந்து வருகிறார்கள். இன்றைய அங்கத்தவர்களின் தொகை 108 ஆகும். ஆனால் 76 அங்கத்தவர்கள் மட்டும் 1995 ம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதிக்கும் மார்கழி மாதம் 31 ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் அங்கத்துவப்பணத்தைச் செலுத்தியது கவலைக்குரிய விடயமாகும்.

### *நிர்வாகசபை*

சென்ற பொதுக்கூட்டத்தின் பின்பு 8 நிர்வாகசபைக் கூட்டங்களை நடத்தியுள்ளோம். இதற்கு மேலாக நிர்வாகசபை அங்கத்தவர்கள் பலபல கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார்கள். IND-sam, INDVANDRE RADET ஆகியவற்றிலும், ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை, பாடசாலை மற்றும் ஸ்தாபனங்களிலும் கருத்தரங்குகளுக்கு அழைக்கப்பட்டுள்ளோம்.

### *சங்கத்தின் செயல்பாடுகள்*

ஒன்றைவிட்ட திங்கட்கிழமைகளில் மாலை 7.30 இல் இருந்து மாலை 8.00 மணிவரை Herning வானொலியில் தமிழ் டெனிஸ் இரு மொழிகளிலும் நிகழ்ச்சி நடத்தி வந்தோம். இந்நிகழ்ச்சிகளுக்கு டேவிட் ஜோச் பொறுப்பாளராக இருக்கின்றார். அதேவேளை ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றி ஒத்துழைப்பு தருகிறார்கள். இருப்பினும் உள்ளூர் கேணிங் வானொலி ஸ்தாபனம் மூடப்பட்டமையினால் இப்பொழுது நிகழ்ச்சிகள் நடத்த முடியாத நிலையிலுயுள்ளோம். உள்ளூர் வானொலிச்சேவை நடத்தும் பட்சத்தில் நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளோம் திரு டேவிட் ஜோச் மாலை வேலைக்குப் போவது காரணமாக அவருடைய இடத்திற்கு எம்.எஸ். கந்தசாமி திரு. மகேந்திரன் வானொலி நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்கள்.

### *கற்பகம்*

சங்கத்தின் பத்திரிகையான கற்பகத்திற்கு திரு. சண் பொறுப்பாளராகயிருக்கிறார். கடந்த ஆண்டு நான்கு இதழ்கள் வெளிவந்தன. ஒவ்வொரு முறையும் 250 புத்தகங்கள் வெளியிடுகிறோம். இவற்றில் 30 புத்தகங்கள் வாசிகசாலைகளுக்கும் கிட்டத்தட்ட 70 புத்தகங்கள் அரச உள்ளூராட்சி சபைகளுக்கும் வேறு சில நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கின்றோம். மற்றையவை அங்கத்தவர்களுக்கும் கற்பக சந்தாதாரர்களுக்கும் அனுப்பிவைக்கின்றோம். ஆக்கங்கள் அனுப்புபவர்களுக்கும் மொழிபெயர்ப்புக்கு உதவுபவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்து இவ்வுதவிகளைச்செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரை கற்பகத்தை வாசித்து வருகிறார்கள். இதில் சிறுவர்களுக்கு என்று ஒரு பகுதி தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்துடன் வாசகர் மத்தியில் கற்பகம் நல்லமதிப்பையும் தரத்தையும் பெற்று வருகின்றது. மக்கள் இதைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் .

### *கலைகலாச்சார விழாக்கள்*

1995 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3ம் திகதி கேர்ணிங்கில் நடைபெற்ற கலாச்சார நிகழ்ச்சிகளை கேர்ணிங் பிரிவின் செயற்பாட்டுக்கழகங்கள் : SID, AOF, SPORGESKOLE, INTERNATIONAL ARBEJDEBEVÆGELSE, HK என்பனவற்றோடு நாங்களும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தோம். டெனிஸ் அகதி உதவிச்சங்க மேற்கு மத்திய மேற்க்குப் பிரிவின் தலைவரான Lars Lunge என்பவரினால் காலச்சார விழா திறந்துவைக்கப்பட்டது.
தமிழ் காலாச்சாரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடனும் டெனிஸ் காலாச்சாரத்தைப்புரிந்து கொள்ளும் நோக்குடனும் 06.10.1995–07.10.1995 லும் கலைவிழாவும் ஓவியக்கண்காட்சியும் நடத்தப்பட்டது. சிறுவர்களுக்கென நடத்தப்பட்ட தமிழ் அறிவுப்போட்டிக்கும் ஓவியக்கண்காட்சிக்கும் மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. பலரால் பலவழிகளில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இது இரு பிரிவுகழளைக் கொண்டது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நடத்தும்படி மக்கள் கேட்டுக்கொள்கிறார்கள். இதற்கு மேலாக பாடசாலைகளினதும் வேறு ஒன்றியங்கள்ளினதும் அழைப்பிற்கு இணங்க நாம் கலை நிகழ்ச்சகளை ஒழுங்கு செய்வதற்கு உதவியும் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றோம்.

### *குடியிருப்புப் பிரச்சனை*

இது சம்பந்தமாகச் சங்கத்துடன் தொடர்பு கொண்டவர்களுக்கு சில ஆலோசனை வழங்கியுள்ளோம். இது அதிகமான தமிழ் அகதிகளுக்கு ஒரு பெரும் பிரச்சனையாயிருந்து வருகிறது.

### *வரியும், வரிதொடர்பான பிரச்சனைகளும்*

குடும்பத்தை ஆதரித்து உதவுவதற்காக இங்கு வழங்கப்படும் வரிச்சலுகையாக 10.000 குரோணர் தொடர்பாக பல தமிழர்களுக்கு வரியறவிடும் செயலகத்துடன் பிரச்சனைகள் இருந்தன. இதனால் ஒன்றியமானது வரிச்செயலகத்துடனும் கேர்ணிங் உள்ளூராட்சிச்சபையுடனும் தொடர்புகொண்டு அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் ஒன்று 18–05–1995ல் ஒழுங்கு செய்திருந்தது. இக்கூட்டத்திற்கு பங்குபற்ற 66 பேர் விண்ணப்பித்தார்கள். ஆனால் 53 பேர் மாத்திரம் பங்குபற்றினார்கள் இவர்களில் 13 பேர்கள் ஒன்றியத்தின் அங்கத்தவர்கள்.

### *அகதிகள்*

தமிழ் அகதிகள் இடம் பெயர்ந்தும் அகதிகளாகவும் உள்ளார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. பல தமிழர்கள் கிழக்கு ஐரோப்பாவிலும் ஆபிரிக்காவிலும் கைவிடப்பட்ட நிலையியுள்ளார்கள். இவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் டெனிஸ் அகதிகள் உதவிச்சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். அவர்கள் தங்களுடன் ஒன்றிணைந்து வேலை செய்யும் மனிதாபிமான உதவி அமைப்புக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். அகதிகளின் பிரச்சனையில் உதவிகளைச் செய்து வருகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## *தமிழ் டெனிஸ் ஒன்றியங்களின் ஒன்றிணைப்பு*

இந்த இணைப்பானது தாய் மொழிக்கல்வி கற்பதால் அகதி அந்தஸ்து கோருதல் என்பன போன்ற பிரச்சனைகளையும் கையாண்டு வருகின்றது. அகதி அந்தஸ்துக்கோரி பலபேர் நிராகரிக்கப்படுவதனால் இவ்வமைப்பானது உள்நாட்டு அமைச்சருக்கு இது பற்றி எழுதியுள்ளது. அத்துடன் சட்டத்தரணிகளுக்கும் பத்திரிகையாளருக்கும் மனித உரிமைக்காகப் போராடும் ஸ்தாபனங்களுக்கும் செய்திகள் எற்படும் பட்சத்தில் எங்கள் ஒன்றியமானது அவற்றை வழங்கி வருகிறது. தமிழ் கற்பிக்கும் பிரச்சனையானது டென்மார்க்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பிரச்சனையாயிருந்து வருகின்றது. தமிழ் மக்களில் பலர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு வருவதினால் இப்பிரச்சனையையும் இவ்வொருங்கிணைப்பானது கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. சென்ற வருடம் இதனை முன்னெடுக்க முடியவில்லை. இது விடையமாக முயற்சிகள் நடைபெறுகின்றன. "Goddag Danmark" என்ற செய்திக் கோர்வையை டெனிசில் உள்ளதை தமிழில் மொழிபெயர்துக் கொண்டிருக்கிறோம். இதைப் புத்தகமாக வெளியிடுவதற்க்கு அமைச்சு 68.000 குரோணரை ஒதுக்கியுள்ளது. இப்புத்தகம் இவ்வருடம் ஆனிமாதம் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பல தமிழ் ஒன்றயங்கள் விரும்பிக்கொண்டதற்கு அமைய, இலங்கையில் தமிழ் அகதிகள் எண்ணிக்கை திடீரென எதிர்பாராத அளவுக்கு கூடிக் கொண்டதினால் அவர்களுக்கு உதவும் நோக்கத்தில் டெனிஸ் கிறிஸ்தவ அவசர உதவி ஸ்தாபனத்தோடு இணைந்து நிதி சேகரிப்பு ஒன்றினை செய்துள்ளோம். 1991ம் ஆண்டு இது போன்ற நடபடிக்கைகளில் ஒன்றை நடைமுறைப் படுத்தினோம். இதற்கு மக்களின் ஆதரவு கிடைத்தது.

INDSAM இனால் நடத்தப்பட்ட சுகாதார வேலைத்திட்டம் டென்மார்க்கில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு சுகாதாரம் விளையாட்டு முதலியவற்றில் ஏற்படும் சேதங்களை மக்களுக்கு விளங்கப்படுத்திக் கொள்ளும் முகமாக பலதுண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. இது தமிழிலும் வெளிவந்தன. தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் வடிவமைப்பதற்கும் எங்கள் ஒன்றியம் உதவி செய்தது. அத்துடன் டென்மார்க் பூராவுமுள்ள தமிழ் விளையாட்டுக் கழகங்களுக்கும் சுகாதார வேலைத்திட்டத்தினருக்குமிடையே நாங்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தோம். பலவிதமான துண்டுப்பிரசுரங்களும் செய்திகளும் விளையாட்டுக் கழகங்களின் மூலம் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இவ்வேலைத்திட்டம் சென்ற வருடம் டிசம்பர் மாதத்தோடு நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் தொடராவிடின் முன்குறிப்பிட்டபடி எங்களால் எடுத்துச் செல்லமுடியாமல் இருக்கும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகளைச்செய்ய உதவியாயிருக்கும்.

## *சிறுபான்மை இனத்தவர்களுக்கான வேலை வசதி*

சிறுபான்மை இனத்தவர்கள் வேலை பெறும் விடயத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. விசேடமாக இளைஞர்கள் தங்கள் கல்வி தொடர்பு உடைய பயிற்சி பெறுவதற்கான இடங்களைப்பெறமுடியாமல் இருக்கிறார்கள் இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை 09-09-1995 இல் INDSAM , SID கேர்ணிங்கின் ஆகியவற்றின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதவியுடன் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. இக்கருத்தரங்கு சிறியதாகவே இருந்தது. ஆனால் பல இனத்தவர்களும் பல அனுபவமுள்ளவர்களும் [illegible] இல் இருந்தும் வெவ்வேறு நகரங்களிலிருந்தும் பங்கு பற்றினார்கள். விசேடமாக கேர்ணிங் உள்ளூராட்சி சமூக சேவைப்பிரிவு உபதலைவர் ஞஜனு கேர்ணிங் பிரிவின் உபதலைவர் ஆகியோர் பங்குபற்றிய அறிக்கையின் சுருக்கமொன்றை டெனிஸ் மொழியில் கற்பகத்தின் 6 வது வெளியீட்டில் வெளியீட்டிருக்கிறோம். அதன் தமிழ் மொழிபெயர்பு 7 வது கற்பகத்தில் வெளியானது. இக்கூட்டத்தின் முழு அறிக்கையைப்பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் INDSAM காரியாலத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## *சிறுபான்மை இனத்தவரின் அதிகாரங்களும் இனவாதமும்*

இக்கருத்தரங்கினை Dokumentation- og Rådgivning Centre (DRC) என்ற அமைப்புடன் இணைந்து 04-11-1995 இல் கருத்தரங்கொன்றை நடத்தியுள்ளோம். இக்கருத்தரங்கு பற்றி பல அதிகாரிகளுக்கும் அறிவித்திருந்தோம். ஆனால் எதிர் பார்த்தளவு பலர் பங்குபற்றிக்கொள்ளவில்லை பங்கு பற்றியவர்களிடமிருந்து திடமான கருத்தக்கள் பரிமாறப்பட்டன. இக்கருத்தரங்கில் சோசலிச சனநாயகக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு HolgerGraversen, சோசலிச மக்கள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் Anna Bastrup என்பவரும் Arhus நகரசபை உறுப்பினரான Husien Arase என்பவரும் சகல இனத்தவருக்குமான சம அந்தஸ்து நீதிச்சபை (Nævnet For Etniske Ligestilling) இன் உபதலைவி DRC.இன் பிரதிநிதிகளும் இதில் பங்குபற்றினார். இதில் உள்ளூர் ஆட்சித்தலைவர்களோ அல்லது பிரதிநிதிகளோ பங்குபற்றாதது கவலைக்குரிய விடயமாகும்.

## *Ikast இல் ஓர் சந்திப்பு*

Ikast இல் உள்ள டெனிஸ் தமிழ் மக்களுக்கு இடையில் ஓர் தொடர்பை எற்படுத்த ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோம். ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இச்சந்திப்பை தொடரமுடியாமல் போய்விட்டது. இவ்வருடம் பிற்பகுதியில் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

## *வகுப்புகள்*

இசைவாத்தியக்கருவிகளை இயக்கும் வகுப்புகள் நடத்தப்படவிருப்தாக கற்பகம் 4ல் அறிவிக்கப்பட்டது. பலர் விரும்பியதால் வகுப்புகள் Brændgårds skole (Herning) ல் புரட்டாதிமாதம் தொடக்கம் நடைபெற்று வருகிறது. அது போல் தமிழ் சங்கீதவகுப்புகளும், வயலின் வகுப்புகளும் நடைபெறுகின்றன. வகுப்புகளை நடத்துவதற்கு நாங்கள் இடவசதிகளை செய்து கொடுத்துள்ளோம்.

## *காகம்*

காகம் சஞ்சிகையானது ஒரு கலந்துரையாடலுக்கு எங்களை அழைத்திருந்தது 06-01-96 இல் Viborg வில் நடைபெற்றது. அதில் எங்கள் சங்கம் பங்கு பற்றியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## *Jylland தமிழ் இசைக்குழு*

டிசம்பர் மாதம் 28–12–1995 இல் யூலண்ட் தமிழ் இசைக்குழு ஒரு விருந்துபசாரத்துக்கு அழைத்திருந்தனர். நாங்கள் பங்கு பற்றுவதாக முடிவெடுத்திருந்தோம். சில தவிர்க்கமுடியாத காரணத்தால் பங்கு பற்றவில்லை.

## *இந்து கலாச்சார ஆராச்சித்தவகல் நிலையம்*

இரு சங்கங்களும் விழாக்களை ஒரேகாலத்தில் நாடாத்துவதால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத்தவிர்க்கும் முகமாக ஒரு சந்திப்பை ஏற்படுத்தி அதில் இருவரும் இணங்கிக்கொண்டோம் .

ஈழத்தமிழர் கலை அரங்கினால் 23–12–1995 இல் நடத்தப்பட்ட கருத்தரங்கிற்கு எங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார்கள். அழைப்பிதல் குறுகிய காலத்தில் கிடைத்ததினால் நிர்வாகசபை கூட்டமுடியவில்லை.

## *பொருளாதாரம்*

அங்கத்துவர் பணம் மொழிபெயர்பு என்பவற்றினாலும் அச்சங்கம் பொருளாதாரத் தேவையின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டது உள்நாட்டு அசைச்சரிடமிருந்து 19.000 குரோணர் சங்கத்தை நடத்துவதற்காகப் பெற்றுக்கொண்டோம். அத்துடன் உதவிசெய்தவர்களுக்கும் நாம் விசேடமாக நன்றி கூறவிரும்புகிறோம். அகதிகள் பிரச்சனையில் செலவீனம் அதிகப்பட்டதினால் LDF என்ற அமைப்பு 2500 குரோணர் உதவி செய்தது.

04–11–1995 ல் நடந்த கருத்தரங்கிற்க்கு ஏற்பட்ட செலவைக் குறைப்பதற்காக Indsam 1500 குரோணர் கொடுத்துதவியது. இப்பணம் 1996ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதிக்குப்பின் எங்களுக்கு கிடைத்தது .

## *முடிவு*

நிர்வாகசபை மத்தியிலும் அங்கத்தவர்கள் மத்தியிலும் பெரியளவிலான ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்து வருகின்றதினால்தான் இச்சங்கமானது தனது வளர்ச்சியைக்கண்டுள்ளது. மேலும் இதே ஆதரவும் ஒத்துழைப்பும் தருவீர்களென நம்புகிறோம்.

இந்த மாதம் 9ம் திகதி எங்கள் சங்கத்தினால் நீண்டகால நிர்வாகசபை உறுப்பினரான திரு லோறன் தோபியோனின் 60ம் ஆண்டு பூர்த்தியாகும் விழாவுக்கு எங்களை அழைத்திருந்தார். நிர்வாகசபை உறுப்பினர்கள் எல்லோரும் பங்குபற்றினோம். அவருக்குச்சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்கூறியும் சிறு அன்பளிப்பொன்றையும் வழங்கியுள்ளோம். அவரை நீடுழி வாழவென வாழ்த்துகிறோம். இவ்வொன்றியம் வளர்வதற்கு உங்களிடமிருந்து புதிய யோசனைகளை எதர்பார்க்கிறோம்.

**நன்றி.**

10 வது இதழில் ஆரம்பமாகிறது

*திரு சிவநாதன் எழுதும்*

**புலம் பேர் இலக்கியத்தின் புதிய போக்குகள் என்னும் தொடர் ஆராய்ச்சிக்கட்டுரை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# FREMTIDENS DEMOKRATI

***Sara Balakrishnan er 19 år, bor i Ikast og læser til sociale-rådgiver i Odense. Hun har skrevet denne artiklen på kronik konkurrencen i Det Fri Aktuelt og fik præmier.***

Demokrati er blevet til et modeord. Ordet >>demokrati<< bliver flittigt brugt af medierne og af beslutningstagerner i vores samfund. Hvis noget er gået demokratisk til, kan ingen klage over proceduren. Dette er dog ikke ensbetydende med, at alle bliver tilfredse med de vedtagne afgørelser. Alligevel er vi stolte af vores demokratiske system og glade for den høje stemmeprocent ved folketingsvalgene.

Demokrati har også sine svagheder, som vi dog sjældent hører om. Demokratiet giver folket magten, men folket er en samling af mennesker med føleser. Ved at spille på deres føleser kan man få folke til at mene noget, som de ikke ville være overbevist om ad fornuftens vej. F.eks. kom Hitler til magten ved at spille på folkets føleser og udnytte den demokratiske procedure. Selv i et land, hvor demokratiet fungerer optimalt, vil der være en tvivl. Den beslutning, som fleretallet vedtager, kan måske vise sig at være forkert, og fejlen kan være uoprettelig. Vi er stolte af den høje stemmeprocent, men ønsker ikke at se i øjnene, at mange af vælgerne ikke er engageret i, hvad der senere sker med den politiker, de vælger.

Jeg tror, at vi i fremtiden vil komme til at beskæftige os mere med, hvor demokratiets grænser går. Bør nazisterne have lov til at fordreje sandheden og udsprede deres løgne i medierne? Er det etiske korrekt, at en barnløs kvinde på 52 skal have lov til at få et barn ad teknologiens veje? Vi kommer i det hele taget til at skulle bestemme om partier, organisationer eller religiøse bevægelser, der ønsker at nedbryde demokratiet, bør have friheden til at gøre det ad demokratisk vej.

En forudsætning for, at vores repræsentative demokrati i Folketinget kan blive en succes, er at lade Folketinget virkelig repræsentere den danske befolkning. Partierne skal selv gøre en indsats for, at de unge politikere får lov til at stille op og komme ind i Folketinget uden at skulle omskoles og dræbe det unge sind. En anden underrepræsenteret gruppe i Folketinget er kvinderne. Tyrkiet, der herhjemme er særligt kendt for sløret, har haft en kvindelig statshoved. Indien, der tit bliver hevet frem for drab på pigebørn, har haft en stærk kvindelig premierminister. Jeg undrer mig tit over, at ingen kvindelig kandidatur til statsministerposten nogen sinde er blevet præsenteret i Danmark. Fremtidens demokrati skal bygges på, at det mere og mere bliver befolkningen som helhed, der bliver repræsenteret i Folketinget og ikke bestemte grupper af samfundet.

Som sagt er det politiske engagement ikke særlig stort hos den almindelige dansker. Måske kan det skyldes, at folk har gennem-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



skuet de gode politikeres evne til til at sige meget uden at sige noget nyt. Når denne metode ikke lykkes, bruges udtryk som >>ingen kommentar<<, >>ikke at træffe<<, eller >>jeg sætter en undersøgelse i gang<<.

Vi må passe på, at demokratiet ikke mister sin værdi ved at flytte beslutningsprocesserne længere væk fra borgerne end nødvendigt vil kun medføre, at folk opgiver at gøre en indsats. Denne opgivende holdning vil være en katastrofe for det sunde demokrati.

Indtil videre er demokratiet efter min mening den bedste styreform, men det er uvist, om vi ikke vil finde en bedre måde at styre landet på i fremtiden. Så længe vi har demokratiet, kan vi prøve at forbedre det ved f.eks. at have mere ØD på arbejdspladserne. For at demokratiet ikke skal være bureaukratisk, kan de ansætte i kommunerne f.eks. begynde med at skrive brevene til befolkningen på almindeligt og forståeligt dansk. Fremtidens borgere er nutidens børn. Derfor er det nødvendigt, at man i folkeskolen og i de gymnasiale uddannelser lærer børn og unge noget om, hvordan samfundet er indrettet og hvilke rettigheder og pligter, vi har. Interessen for samfundsudviklingen og beslutningsprocesserne kan vækkes ved at inføre samfundsfag som et obligatoriske fag.
Jeg er en flygtning, der kommer fra et krigshærget land. Den, der havde magten, var som regel den, der havde et gevær på hånden. Jeg var derfor glad for at komme til et land som Danmark, der efter min mening havde et perfekt styresystem. Jeg tror, at grunden til at folk generelt er ligeglade med politikerne skyldes, at danskerne opfatter demokratiet som en selvfølge. For at demokratiet ikke skal blive opslugt af personfikseringer, er det nødvendigt, at befolkningen tager aktiv del i politik.

De politiske organisationer må også gøre en ekstra indsats for at tilrække befolkningens interesse. Mange mennesker synes, at det er nemmere at sidde i deres varme sofa foran fjernsynet og se virkeligheden, som medierne fremstiller den. Hvorfor skal man tage af sted for at møde en politiker, når man sagtens kan møde dem alle transmitteret direkte fra studiet i København? Jeg ser vemodigt på denne udvikling, der betyder, at en politiker kan stå i en stor sal og tale til de syv mennesker, dervar mødt op. Det er meget sjældent i andre lande, at landets statsminister kommer til en lille by og taler med folk på gågaden. Det forbavsende for mig er, at folk ikke udnytter denne chance. Vi har vel alle et eller andet, som vi er utilfredse med systemet. Hvorfor ikke gå hen og sige til statsministeren, at han må til at sætte statens uddannelsestøtte op i stedfor at sidde foran fjernsynet og grine ad hans cykelhjelm?

Jeg vil ønske, at flere mennesker tog del i det politiske arbejde. Når vi kan boykotte Shell og franske vine, kan vi også fortælle vores politikere, hvordan tingene kan gøres bedre. Demokratiet kan gøres bedre ved at flere mennesker gør op med sig selv hvilken vej, vi skal gå. Det er ikke nok at sætte et kryds i den tro, at det er ens pligt. At flere mennesker deltager i diskussioner betyder, at der kommer flere meninger frem i offentligheden. De mennesker, der har arbejdet for en sag, vil føle, at de har været med til at tage en beslutning, der vedrører landet. Mere engagement, mindre bureaukrati og bedre information vil give et mere demokratisk Danmark.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிர்காலத்தின் ஜனநாயகம்.....

"ஜனநாயகம்" என்பது ஒரு நவநாகரிகச் சொல்லாக மாறிவிட்டது. எமது சமுதாயத்தில் ஜனநாயகம் என்ற சொல் தீர்மானமெடுக்கப்படுபவர்களாலும் தொலை தொடர்புச் சாதனங்களினாலும் அடிக்கடி பாவிக்கப்படுகின்றது. ஒரு செயற்பாடு ஜனநாயகத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் போது எந்த நடைமுறைப்படுத்தலுக்கு எதிராக எவரும் முறையீடு செய்ய முடியாது. எடுக்கப்பட்ட முடிவுகளில் அனைவரும் திருப்த்தியடைவர் என இங்கே பொருள் விளங்கலாகாது. அப்படியிருந்தும் நாம் எமது நாட்டின் ஜனநாயக முறையைப்பற்றி பெருமைப்படுவதுடன் பாராளுமன்றத் தேர்தலில் அதிக வீத மக்கள் வாக்களிப்பதையிட்டு மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

ஜனநாயகத்திற்கும் தனது பலவீனங்கள் உண்டு. இவை பற்றி நாம் பெரிதாகவே அறியப் பெறுகின்றோம். ஜனநாயகம் மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கின்றது. ஆனால் மக்கள் என்போர் உணர்ச்சிக்களுள்ள ஒரு கூட்டமான மனிதர்களே. இந்த மக்களின் உணர்ச்சிகளுடன் விளையாடுவதன் மூலம் ஒரு கருத்தின் காரண காரியங்களை விளங்கிக் கொள்ளாமலேயே கருத வைக்க முடியும். உதாரணம், மக்களின் உணர்ச்சிகளுடனும் விளையாடுவதன் மூலமும் ஜனநாயக நடைமுறையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலமும் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தார். ஜனநாயகம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் நாடாக இருந்தாலும் அங்கும் ஒரு அவநம்பிக்கையிருக்கும்.

பெரும்பான்மை மக்களால் எடுக்கப்படும் முடிவும் சில வேளைகளில் பிழையானதாக இருப்பதுடன் அப்பிழையானது மீண்டும் திருத்தி அமைக்க முடியாததாகவும் அமைந்து விடுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலின் கூடியவீதமான வாக்களிப்பினைக் கண்டு நாம் பெருமையடைந்தாலும் பெரும்பாலான வாக்களிப்போர் தெரிவு செய்யும் அரசியல்வாதிக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அக்கறைப்படுவதில்லை.

எதிர்காலத்தில் ஜனநாயகத்தின் எல்லை எவ்வளவுக்கெவ்வளவு விரிவடைகின்றதோ அவ்வளவிற்கு நாம் எம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகின்றோம் என எண்ணுகின்றேன். உண் மைகளைத் திரித்துத் தமது பொய்களைத் தொலைதொடர்புச் சாதனங்களில் பரவச் செய்ய நாசிஷ்டுகளிற்கு அனுமதி வழங்க வேண்டுமா..? ஒரு குழந்தையற்ற 52 வயது நிரம்பிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணை தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் குழந்தை பெற அனுமதிப்பது நியாயமா...?நாம் பொதுவாகத் தீர்மானிக்கும் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் சமயரீதியான இயக்கங்கள் ஜனநாயகத்தை அடியோடு ஒழிப்பதற்கு ஜனநாயக முறையைப் பயன்படுத்த அவர்களிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை டனிஷ் பிரஜைகளின் பிரதிநிதியாக இருக்க வைப்பதே எமது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வெற்றிக்கு வழியாக அமையும். இளம் அரசியல்வாதிகளின் எண்ணங்கள் சிதைவடையாமலும் அவர்களுக்கு மீள்பயிற்சி அளிக்காமலும் அவர்கள் பாராளுமன்றத்திற்குள் வருவதற்கு கட்சிகள் ஆவன செய்தல் வேண்டும். அடுத்ததாக பாராளுமன்ற த்தில் குறைந்த பிரதிநிதித்துவம் உடைய குழு பெண்களாவர். இங்கே முக் காடினால் பெயர் போன துருக்கி ஒரு பெண்ணை அரசின் தலைவியாகக் கொண்டிருந்தது. பெண்சிசுக் கொலை பற்றி அதிகம் பேசப்படும் இந்தியா ஒரு உறுதியுள்ள பெண்மணியை பிரதமராகக் கொண்டிருந்தது. டென்மார்க்கில் ஒரு போதும் பிரதமமந்திரிப் பதவிக்குரிய வேட்பாளராக ஒரு பெண்மணியும் தெரிவு செய்யப்படாதது என்னை ஆச்சரியத்திலேயே ஆழ் த்துகின்றது. சமுதாயத்தின் தனிப்பட்ட குழுக்களைப் பிரதிநிதித்துவம் வகி க்காமல் மக்கள் முழுவதையும் பாராளமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய வகையிலேயே எதிர்கால ஜனநாயகம் கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

ஏற்கனவே சொன்னது போல் சாதாரண டெனிஷ் பிரஜையின் அரசி யல் பங்களிப்பு குறைவானதே. புதிதாக எதையும் சொல்லாமல் நிறையப் பேசு வதே அரசியல்வாதியின் திறமை என்பதை மக்கள் கண்கூடே கண்டது தான் சில வேளை இதன் காரணமாக இருக்கலாம். இந்த முறை செல்லுபடி யாத பட்சத்தில் "எந்த விமர்சனமும் வேண்டாம்." அல்லது "சந்திக்க முடி யாது"அல்லது "அல்லது நான் ஒரு பரிசோதனையை ஆரம்பித்துள்ளேன்." போன்ற சொற்தொடர்கள் உபயோகிக்கப்படும்.

முடிவெடுக்கும் நடவடிக்கையைப் பொதுமக்களிடமிருந்து தேவை க்கு அதிகமான தூரத்தில் வைத்தால் ஜனநாயகம் தனது தனித்துவத்தை இழந்து விடாமல் பாதுகாத்தல் வேண்டும். பிரதேசரீதியான அரசியலில் பங்களித்தலானது அதிகளவில் இல்லாவிட்டாலும் அதில் பங்களித்தல் சாத்தியமானதாக இருத்தல் வேண்டும். முடிவெடுக்கும் நடவடிக்கை தேவைக்கு அதிகமான தூரத்தில் இருப்பதால் மக்கள் தங்களது பங்களிப்பினைக் கைவிட்டு விடுகின்றனர். இப்படியான கைவிடுதலானது சக்தி நிரம்பிய ஜனநாயகத்திற்குப் பேரிடியாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று வரை எனது கருத்துப்படி ஜனநாயக முறையே சிறந்த ஆட்சி முறையாகும். அதைவிடச் சிறந்த ஆட்சி முறையை எதிர்காலத்தில் கண்டுபிடிப்போமா என்பது தெரியாத ஒன்றாகும். ஜனநாயக முறை இருக்கும் வரை அதனைச் சிறப்படையச் செய்வதற்கு உதாரணமாக வேலைத் தளங்களில் பொருளாதார ஜனநாயகத்தை மேலும் அதிகரிக்கலாம்.

ஜனநாயகம் மேலிடத்து முடிவில் மட்டுமே தங்கியிருக்காமலிருக்க நகரசபை அலுவலகங்களில் தொழில் புரிவோர் பொதுமக்களுக்கு எழுதும் கடிதங்களில் விளங்கிக் கொள்ள வேண்டிய டெனிஷில் எழுத ஆரம்பிக்க வேண்டும். இன்றைய குழந்தைகளே நாளைய பிரஜைகள். அதனாலேயே பாடசாலைகளிலும் உயர்கல்வியிலும் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் சமுதாயத்தின் அமைப்புப் பற்றியும் எப்படியான உரிமைகளும் கடமைகளும் எமக்கிருக்கிறது என்பது பற்றியும் கற்பித்தல் வேண்டும். சமுதாய அபிவிருத்தி பற்றிய ஆர்வத்தை முடிவெடுப்பது பற்றிய நடவடிக்கையும் சமூகக் கல்வியைக் கட்டாய பாடமாக ஆக்குவதன் மூலமுமே கொண்டு வர முடியும்.

நான் போரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு அகதி. எவரின் கையில் துப்பாக்கி இருக்கின்றதோ அவர்களிடமே அதிகாரமும் இருக்கின்றது. அதனாலேயே ஒரு திறமையான நிர்வாக அமைப்புடைய நாடான டென்மார்க்கிற்கு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். டெனிஷ் மக்கள் ஜனநாயகம் தானாகத் தொடரும் எனக்கருதுவதாலேயே பொதுவாக அவர்கள் அரசியல்வாதிகளைப் பற்றி அக்கறை கொள்வதில்லை என்று எண்ணுகின்றேன். தனிப்பட்ட ஒருவரால் ஆக்கிரமிக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின் பொதுமக்களும் அரசியலில் பங்களிப்பது அவசியமாகும்.

அரசியல் அமைப்புக்களானது பொதுமக்களின் ஆர்வத்தைக் கவரப் பிரத்தியேக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். தமது கதகதப்பான கதிரைகளில் அமர்ந்து தொலைக்காட்சியில் பரப்பப்படும் நிகழ்வுகளைப் பார்ப்பது இலகுவானது என நினைக்கின்றனர்.

கொப்பனேக்கனில் இருந்து நேரடி ஒலி–ஒளி பரப்பின் மூலம் அரசியல்வாதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு இருக்கும் போது எதற்காக அவர்களை நேரடியாகத் தேடிச் செல்லல் வேண்டும். இந்த முன்னேற்றத்தை நான் மனவருத்தத்துடனேயே பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் பெரிய மண்டபத்தில் கூடியிருக்கும் ஏழு மனிதர்களுக்கு முன்பாக ஒருவர் எழுந்து நின்று பேசும் சூழலையே இது உருவாக்கியுள்ளது. ஒரு நாட்டின் பிரதமமந்திரியே ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறிய நகரத்துக்கு வந்து நடைபாதையால் செல்லும் மக்களுடன் பேசுவதைப் பிற நாடுகளில் காண்பது மிகவும் அரிதான ஒன்றாகும். இப்படியான அரிய சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்தாதது என்னை ஆச்சரியத்திலேயே ஆழ்த்துகின்றது. எம் அனைவருக்கும் இந்நாட்டு நடைமுறையில் ஏதாவது ஒன்றில் அதிருப்த்தியிருக்கும். பிரதம மந்திரியானவரிடம் சென்று அவரது துவிச்சக்கரவண்டித் தலையுபகரணத்தை தொலைக்காட்சியில் பார்த்துச் சிரிப்பதை விட்டுவிட்டுக் கல்விக்கான அரசாங்க உதவித்தொகையைக் கூட்டினால் என்னவென்று ஏன் கேட்கக் கூடாது....?

அதிகமான மக்கள் அரசியலில் பங்களிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஷெல்(Shell) ஐயும் பிரஞ்சு நாட்டு வைனையும் பகிஷ்கரிப்பது போல் ஒவ்வொரு விடயத்தையும் மேலும் எப்படித் திறம்படச் செய்யலாம் என எமது அரசியல்வாதிகளுக்குத் தெரியப்படுத்தலாம். எந்த வழியில் நாங்கள் செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்வதில் பெரும்பாலேனோர் பங்களிப்பதன் மூலம் ஜனநாயகத்தைச் சிறப்படையச் செய்யலாம். புள்ளடியிடுவதுடன் மட்டும் ஒருவருடைய கடமை முடிந்து விடாது. பெரும்பாலான மக்கள் கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதன் மூலம் பலரது கருத்துக்கள் அரசாங்கத்தின் முன் வைக்கப்படும். ஒரு காரியத்துக்காகப் பாடுபட்ட மக்கள் தாமும் தமது நாடு பற்றிய ஒரு முடிவை எடுக்கத் தமது பங்களிப்பினை அளித்ததாக உணருவர். கூடுதலான பங்களிப்பும் குறைந்த அரசு அதிகார முடிவும் (Bureaukrati) விபரமான தகவலும் டென்மார்க்கை மேலும் ஜனநாயகபூர்வமாக்கும்.

*தமிழில் மொழிபெயர்ப்பு*
*திருமதி. வசந்தி கமலநாதன்.*

சோசலிச ஜனநாயக்கட்சியன் இளைஞர் பகுதியினாலும் Det Fri Aktuelt என்ற பத்திரிகையினாலும் இணைந்து நடத்தப்பட்ட போட்டியில் செல்வி. சாரதா பாலகிறிஸ்ணன் "எதிர்காலத்தில் ஜனநாயகம் " என்ற தலைப்பில் கட்டுரையை எழுதி முதல் பரிசு பெற்றார். இப் போட்டியில் 700 பேருக்கு மேல் பங்கு பற்றினார்கள். டெனிஸ் பிரதம மந்திரி திரு Poul Nyrup Rasmussen செல்வி. சாரதா பாலகிறிஸ்ணனை கௌரவித்து பரிசில்கள் வழங்கினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Dragen i brønden

Der var engang en konge der havde 3 døtre. En dag kaldte han på sine 3 døtre, og sagde til dem at han elskede dem alle 3 meget højt, og ville meget gerne vide hvor meget de elskede ham. Den første datter sagde at hun elskede ham som honning, og kongen var tilfreds med svaret. Den anden datter sagde at hun elskede ham som sukker, kongen var igen tilfreds med svaret. Den tredie datter sagde ikke noget så kongen spurgte igen hvor meget hun elskede ham. Hun tænkte sig lidt om og så svarede hun. Hun sagde at hun elskede ham som salt, det var kongen aldeles ikke tilfred med og han blev meget vred på sin pige.
Uden at hun kunne nå at forklarer eller sige noget tog kongen hende med ud, og spurgte en tigger om han ville gifte sig med prinsessen. Tiggeren svarede (som de fleste nok ville gøre)at han gerne ville giftes med den flotte prinsesse. Tiggeren tog prinsessen med sig hjem hvor hans mor ventede på ham.
Nu havde tiggeren og prinsessen været gift i over et år, og var meget glade for hinanden.
En dag rejste tiggeren sammen med nogel af de rige handelsmænd. Han skulle slæbe nogle af deres ting, og gøre hvad de bader om, nærmest som en tjener, så fik han nogle skillinger for det. De rige handelsmænd havde noge flotte vanddunke med sig, fyldt med vand, men efterhånden blev de tømt, for de var alle sammen meget tørstige af at gå så langt.
Handelsmmændene sagde til tiggeren at han skulle hente noget vand ved brønden der lå lidt længere væk. Tiggeren fik alle vanddunkene som skulle fyldes med sig. Han gik hen til brønden og ville hejse en spand, da en drage kom op at vandet og sagde at nu ville den æde ham. Han blev meget bange og sagde:" Vil du ikke nok lade mig gå min ven ?" Dragen sagde at han var den første, der havde kaldt dragen, for sin ven, så han fik lov til at hente alt det vand han skulle bruge, og da tiggeren skulle gå spurgte dragen, ham, om han havde en kone, og tiggeren svarede at han havde den smukkeste kone i hele verden. Så gav dragen ham to røde æbler, og sagde at han skulle give det ene til hans kone og gemme det andet til ham selv kom hjem.
Tiggeren gjorde som dragen sagde og da han var så heldig at møde en rejsende, spurgte han den rejsende om han ikke gad give et æble til hans kone og da den rejsende sagde ja fortalte tiggeren hvor de boede og alt sådan noget.
Den rejsende gav æblet til prinsessen, og rejste så videre. Prinsesssen tog en kniv og ville dele æblet, så hun fik den en halvdel og hendes svigemor fik den anden halvdel, men da hun skar i æblet lå der diamanter i stedet for kerner i æblet.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Prinsessen og svigermoren blev meget glade for det, og bygggede straks et stort slot for diamanterne . Der var en stor have og prinsessen og svigermoren fik en hel masse nyt tøj.

Da tiggeren kom hjem til byen igen kunne han ikke kende den, for istedet for hans usle hytte, lå der nu et stort slot og nu kom hans kone løbende ud af slottet i en stor og flot kjole. Tiggeren spurgte hvor de havde alt det fra, og prinsesssen sagde at han ikke skulle spille dum (tiggeren vidste ikke at der var diamanter i æblet) men tiggeren sagde at han virkelig ikke vidste noget om det, og så sagde at hans kone at der lå diamanter i det æble hun havde fået af ham. Tiggeren sagde at havde et æble til, og da de skar i det, var der også diamanter i den. De var meget rige, og byggede en kro hvor de fattige kunne komme og få et måltid mad gratis. De vidste trods alt hvordan det var at være fattig.

De andre folk i byen fortalte det til deres venner og det varede ikke længe før kongen fik nyheden at vide. Kongen var meget nysgerrig og skrev derfor et brev til det andet slot. Han ville gerne give et visit hos dem. Manden og konen på slottet skrev pænt et brev tilbag, hvor der stod at de var meget velkomne til at komme næste dag.

Prinsessen sagde til kokken at der ikke måtte kommes salt i maden.

Kokken svarede:" Jamen, det er jo ikke til at spise uden salt." Men det var prinsessen ligeglad med.

Nu kom kongen og hans mænd, og de fik noget at spise, men de lagde alle sammen deres gaffel vær efter den første bid.

Prinsessen spurgte om der var noget i vejen, men kongen sagde bare at han ikke var særlig sulten. Prinsessen sagde at de godt kunne spise lidt af alt den gade mad. Så brast kongen i gråd, og sagde at der ikke var salt i maden.

Aha, sagde prinsessen, da jeg sagde at jeg elskede dig som salt, smed du mig ud, men nu kan du måske forstå hvorfor jeg sagde det. Salt er nok bedre en honning til maden, sagde kongen og så undskyldte han hende.

Prinsessen klappede i hænderne og nu kom tjeneren med noget mad som de var salt i. Nu spiste kongen og hans mænd, for de var meget sultne efter deres lange tur.

PS. Det er et eventyr som jeg har læst, om hvor meget salt egentlig kan betyde.


*Kala Balakrishnan*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# "இடம்"

................................கவிதைக்கதை.......................

-முல்லையூரான்...............................

இப்புவியில்
நான் கண்விழித்தபோதே
எனதப்பா ஓடிப்போனாரென்று
அம்மாவின்கண்ணீர் சொல்லிவிழுந்து அழுதது.

எனது புரியாத சிரிப்புக்குள் முகம் புதைத்து
தன்நெஞ்சோடு அள்ளி கொஞ்சிக்கொஞ்சி
"கரீனா" எனவெனை அழைத்து காலம் தள்ளினாள் எனதம்மா.

தனிமையிலேயே காலம் மலையாய் நின்றது.
பாலப்பருவம் எனது அப்பாவின் நினைவில்
அழுதும் சிரித்தும் நகரவும்
அடுத்தவரது அப்பாக்களில் காதல் கண்களிட்டு வெம்மிப் பொருமி
தனித்தவென் தாயுடன் மட்டும் காலம் தள்ளினேன்.

இது அயலவர்க்கொன்றும் புதிதாய் இல்லை.
எனது வெறுமை என்னுடன் மட்டும் எல்லைப்பட்டது.
எனது வெறுமை எல்லைக்குள்
எனது தாய்ப் பசு மட்டும் தலைவிட்டு
தாகம் தணித்தது......அதுவும் அழுதது.

வெட்டிய தங்கமுடியும் பெரிதாயில்லாத எனது கண்களும்
கிழித்த கோதுமைக்கதராய் ஒல்லியாய்
ஓடித்திரிந்த என் பாலப்பருவமதில்
"அப்பா இவரென" எனது தாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனது காதலனை அறிமுகப்படுத்தினாள்.
அன்றுடன் எனது தாய்மொழி அன்பும் அறுந்து குளிரிடை வீழ்ந்தது.

அப்போதைல்லாம் தனித்தவெளியில்
ஓடும் குருவியின் வாழ்வதாய்
எனது வாழ்வும் எல்லை கடந்து........
பள்ளித்தோழிகள் நகைப்பிலும் வாடி;
மனமது கடுத்து வைரம் பாய்ந்து
பதினெண் வயதில் தனியிடம் தேடி
பள்ளிக்கல்வி பயனற்று முடியவும்,
தனியறையெடுத்து வாழ்வு தொடங்கினேன்.

அப்போதெல்லாம் வாழ்வது
ஏதோ சுவையாய் இருந்தது.
பள்ளிப்பொறுப்பை உதறியெறிந்து
பாலியல் விதிர்ப்பில் இரவினில் மலர்ந்து
நிலவிலும் மழையிலும் நடமிடும் கடைகளில்
ஆண்களைத்தேடி கண்கள் வாடி
வருமது நாளில் ........

ஒருநாள் ஒருவன் தன்னை தமிழன் என்றும்,
அகதியாய் ஓடி துருவவாழ்வதில்
தனிமையில் கிடப்பதாய்
சொல்லிச் சிரித்தனன்.

ஒல்லிய தேகமாய்
எரித்து எஞ்சிய மரத்தடிபோல சிரித்து நின்றவன்......
என்மனவெளியுள் ஆசனம் போட்டான்.
வெற்றிடம் ஒன்று வெற்றிடத்தை சேர்ந்ததென
இருவரும் மகிழ்ந்து வாழப்பழகினோம்.

இன்னொரு வாழ்வு எனக்கது புதியதாய்
கற்றுக்கொண்டே............ இடர்படுமிடத்தில்
விடாப்பிடியாக எனது விருப்பமே
எப்போதும் எப்போதும் வெற்றிகள் கொள்ள,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டுத்தந்து விருப்பமாய் என்னுடன்
வாழப்பழகினான் தேவன் என்ற நல்ல தமிழன்.

குளிரிலும் வெயிலிலும் கொடும்பனி மூட்டமும்
வகைவகை மலரிடை மனமது வீசி
வாழ்க்கை நடக்கையில்
தமிழ்த்தேவன் விரைவாய் தன்னினத்தொருத்தியை
திருமணம் முடித்து பக்கத்து வீட்டில் குடிபுகுந்திருந்தான்.

வெற்றிடம் ஒன்று என்னுள் விட்டுச்சென்ற
வான்நிகர் வெளியொடு வாழ்வு மீண்டும்
பெருமலைச் சுமையாய் இறுகி எழுந்தது.
தற்கொலைக்கெல்லாம் துணிதலுமல்லேன்!
அத்தமிழ் தேவனை வீசியெறிய இடங்களுமில்லேன்!
சேலைக்குள் புகுந்த அவனின் விருப்புக் கெதிராய்
எனது கைகளில் ஆயுதமில்லேன்!

காற்றுக்கு ஒதுக்கிய தலைமுடியாய்
மீண்டும் அத் தமிழ்தேவனை மறக்கும் தவமியற்ற......
இன்னொரு கட்டடத்துள் மாறி விழுந்தேன்
நான் மறக்க விரும்புபவைகளே நினைவில் நின்றன.
அறுவடையின்பின்பும் வயல்களில் கோதுமைகள்போல்..
வாழ்வதை ஓட்டி ..........

சனத்திரள் கூடும் சந்தையொன்றில்
விலைகளிடவும், காசுகள் வாங்கி கணக்குப் பார்க்கவும்,
வேலைக்கென்னை அமர்த்தினர், மகிழ்ந்தேன்.
இப்போதெல்லாம் என்னுள் ஒரு ~~[illegible]~~ கிழவி
அடிக்கடி வந்து கப்பல் விடுகிறாள்.
தள்ளாத வயதிலும் தள்ளு வண்டிலொடு
தனிமையில் கிடப்பவள், கணவனை இழந்து அதன்
பருவகால நினைவுகள் மட்டும் தன் தலையணையாக
வாழ்வதில் சுகமெனவாழுமக் கிழவி ஒருநாள்
"அழகிய பூனைக் குட்டி ஒன்று என்னிடமுண்டு
விருப்பதில் உண்டெனில் வந்துபாரென" வரவேற்றாள்..

(அடுத்த இதழிலும் தொடரும்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழரும் மதப்போரும் (4)

*கவிவேழம் பாரதிபாலன்*

புழுதி மணத்தையோ, கடல் மணத்தையோ கொண்டு, மழைவரும் அறிகுறியை முன் கூட்டியே உணர்ந்தவர்கள் தமிழர்கள்.
வாசனை நிறைந்த பூக்கள், இலைகள், மூலிகைகள் முதலிய இயற்கைப் படையல்கள் சிலவற்றை முகரும் போது, அல்லது, சிலவகையான வாசனைத் திரவியங்களை, குளியல் சாதனங்களை முகரும்போது, அந்த வாசனையின் வழித் தடத்தின் ஊடாக எம்மைப் பாதித்த, எம்மிடையே எம்போதோ பதிவாகிப்போன இன்ப, துன்ப நிகழ்வுகளுக்குள் அல்லது சுமை ஏறாத சுகந்தமான இளமைப் பருவத்திற்குள் சஞ்சரிக்கிறோம்.
இவ்வாறு, உலகின் மனிதக் குழுவினர் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வாசனையுடன் அல்லது வாசனைகளுடன் தொடர்பு பட்டுக் காணப்படுகின்றனர்.
எனது சிறுவயதில் ஏற்பட்ட சுகயீனம் ஒன்றிற்காக மிகவும் வெறுப்புடன் உட்கொண்ட 'அஸ்பிரின்' துகளின் வாசனை, பாடசாலை நாட்களில் பயன் படுத்திய அப்பியாசப் புத்தகங்களில் வீசுவதாக இனங்கண்டு குமட்டல் எடுத்து இருக்கிறேன்.
எனது சிந்தனையைச் செம்மைப்படுத்த மாற்று நடவடிக்கையாக எனது பாடசாலை உபகரணங்களுக்கு எனக்குப் பிடித்தமான வாசனைகளை ஊட்டி உவகை பெற்றும் இருக்கிறேன்.

சில சமுகக் குழுவினருக்குப் பிடித்தமான வாசனை, வேறு சமுகக் குழுவினரை மூக்கைப் பிடிக்கும்படியாகச் செய்து விடும்.
எமது இன்றைய மேற்குலக வாழ்வில் புழுங்கல் அரிசி வேகுவதும், மீன், கருவாடு முதலியன பொரிவதும், வேகுவதும், எம்மை ஊர் நினைவுகளுக்கு இட்டுச் சென்று இன்பம் தரும்.
இனிது சுவைத்து இன்ப நினைவுகளில் மிதப்போம்.
அதேவாசனைக்கு மேற்குலகோ மூக்கைச் சுழித்துக் கொள்ளும்.
அதேபோல் மேற்குலகம் உபயோகிக்கும் ஒருவகைப் பாற்கட்டி எம்மவரைத் திக்கு முக்காட வைத்திருக்கிறது.
" கழுதைக்கு வேண்டுமா கற்பூரவாசனை?, சாக்கடை வாசிக்குப் பூக்கடை வாசமா?" என்பவை தமிழர்தம் பொன்மொழிகள்.
சைவ சமயிகள் எங்கு வாழ்ந்தாலும் கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி, சந்தனம் முதலிய வாசனைகளில் தெய்வ சுகம் பெற்றுத் திளைப்பர்; முன்னைய ஊர்க்கோயில், விழாக்கள், சம்பவங்களுக்குள் வலம்வருவர்.
அதேபோல் பௌத்தர்களும், இசுலாமியரும் வேறு சில மதத்தவரும் ஊதுபத்தி, சாம்பிராணி, அத்தர் முதலிய வாசனைகளூடாக தெய்வானுபவம் பெற்றுத் திளைப்பர்.

1977ல் மறைந்த எனது குருநாதரின் வாசனையை ஐந்து வருடங்களுக்கு மேல் வாழவைத்து இருக்கிறேன்.
எப்படி என்று கேட்கிறீர்களா ?
குருநாதர் மறையும்வரை தமது உடல் ஈரம் ஒற்ற உபயோகித்த துண்டை (துவாய்), அவரது வாசனையை இழக்கவிடாது எனது பெட்டிக்கு அடியில் பாதுகாத்ததுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிழக்குப் பகுதியில் வாழ்ந்த நான், நாட்டின் வன்முறைச் சம்பவங்களால் அந்தப் புனித வாசனையை இழந்துவிட்டேன்.(குருவினுடைய சீடர் ஒருவரால் யாழ்/கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் குருவின் மறைவின்பின் எழுப்பப் பெற்றதே இராமச்சந்திர இலிங்கேஸ்வரர்" என குருவின் நினைவாக விளங்கும் சிவாலயம்).

எனது அறிவுக்கு எட்டிய காலப்பகுதிகளில் இருந்து ஒரு வகை இனிய வாசனையை அனுபவித்து வந்து இருக்கிறேன்.
அந்த வாசனை நான் உபயோகித்த ஏதேதோ பொருள்களில் தோன்றியும், தோன்றாமல் நின்று உள்ளத்திற்கு இனிமை தடவி வந்திருக்கிறது.
அந்த வாசனையின் வழித் தடத்தின் ஊடாக, அதற்குரிய சம்பவக் கோர்வைகளை இனங்காண முயன்று, தோல்விகளையே தழுவி இருக்கிறேன்.
எனது அறிவுக்கு எட்டாத குழந்தைப் பருவத்திற்கு உரிய ஏதோ இனிய சம்பவத்துடன், அந்த வாசனை தொடர்பு பட்டு இருக்க வேண்டும்.
அந்த இனிய அனுபவத்தை, ஏதோ ஒரு பூவில் இருந்து உணர்வதாக 'கவிதைக் கனவுகள்' எனும் எனது நூலில் வரும் குறுங்காவியத்தில் அதற்குரிய சம்பவத்திற்கு ஏற்றாற்போல் புனைந்துள்ளேன்.
(" பூவாசம் தரும்போது புளகிக்கும் நினைவொன்று புரியாத இன்பத்தை ஊட்டும்" கவிதைக்கனவுகள் பக். 76)
நீண்ட காலம் தேடிய, என்னுடன் தொடர்பு பட்ட அந்த இனிய வாசனை, 'சைவர்களுடன் தொடர்புடைய வாசனையோ?' என்ற ஐயப்பாட்டை டென்மார்க்கே கிளப்பி இருக்கிறது.
இரு ஆண்டுகளுக்கு முன் டென்மார்க் வீபோ நகரத்தில் இரு டெனிஸ் துறவியரைச் சந்தித்தேன்.
'சந்தித்தேன்' என்பதைவிட 'தரிசித்தேன்' என்பதே பொருந்தும்.
ஒருவர் ஆண்; மற்றவர் பெண்.
காவி உடை, சடாமுடி, கமண்டலம் கொண்ட சிவத் தோற்றம்.
பல காலமாக என்னைப் பிரமிப்பில் ஆழ்த்தி வந்த அதே வாசனை அவர்களில் இருந்து வீசுவதாக உணர்ந்தேன்.
மீண்டும் அந்த நறுமணத்தின் வழித்தடத்தைப் பின்பற்ற விழைந்தேன்.
முடியவில்லை.
எனது உள்ளமோ கரைகாணாத களிப்பில் துள்ளியது.
அந்தத் துறவியருடன் பேச வேண்டும் போல் ஆவல் எழுந்தது.
எப்படி பேசுவது? என்ற தயக்கம்.
ஒருவாறு ஆங்கிலத்தில் "காலை வணக்கம் " தெரிவித்தேன்.
பதிலுக்கு ஆங்கிலத்திலேயே 'வணக்கம்' தெரிவித்த டெனிஸ் சைவத்துறவிகளிடம் இருந்து பின்வரும் தகவல்களைப் பெறமுடிந்தது.
அவர்கள் சிவ வழிபாட்டினர்; இந்தியா முழுவதும் சென்று சிவத்தலங்களைத் தரிசித்து இருக்கிறர்கள்; மலைக்குகைகளில் தவம் இயற்றியும் இருக்கிறார்கள்; டென்மார்க்கில் ஓர் ஒதுக்குப்புறமான காட்டுப் பிரதேசத்தில் ஆச்சிரமம் அமைத்து வாழ்கிறார்கள். "அணுவுக்குள் அணுவான சிவனே உலகிற்குப் பொதுவான தெய்வம்" என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர்கள்.

ஒரு சைவ மதக் குடும்பத்தில் பிறந்ததை இட்டு என்னையும் புகழ்ந்தனர்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"என்னப்பா! டென்மார்க்கை நன்றாக அனுபவிக்கிறாயா?" என்றும் ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தனர்.
"இல்லை எனது நாட்டின் விடியலை எதிர் பார்க்கிறேன்." என்ற எனது பதிலால் திருப்தியும் தெரிவித்தனர்.
அந்த டெனிஸ் துறவியர் இறுதியாக, " புலம் பெயர்ந்து வாழும் நீங்கள் உங்களது உண்மை வேடத்தை உணராது 'கோமாளி வேடம்' பூணுவது உங்களது நிரந்தர நிம்மதியையே பறித்துவிடும். எச்சரிக்கையாக வாழுங்கள்" என்று விட்டு "சிவசிவ" என்று கூறியபடி விடைபெற்றனர்.
துறவியர் கூறிச் சென்ற " கோமாளி வேடம் " எது பற்றியதாக இருக்கும்?
அந்தக் கோடை நேரத்தில் அவர்கள் காவி உடைக்கு முன்னால் இந்த நாட்டிற்கு ஏற்றாற்போல நான் அணிந்திருந்த எனது குளிர் உடை பற்றியதா?
அல்லது, தங்களூடாக பரிமாறிய அந்த அபூர்வ வாசனையை இனங்காணத் தவறிய எனது அறியாமை பற்றியதா ?
ஒன்றும் புரியவில்லை; ஒரே குழப்பம்.

14.03.96 ல் பாரிசில் இருந்து வெளியான 'ஈழமுரசு' பத்திரிகையே குழப்பத்தை தெளிவித்து இருக்கிறது.
" பாரீசில், சைவ ஆசாரக் குடும்பத்தில் பிறந்த புலம்பெயர்ந்த தமிழ் வாலிபர், மதம் மாறி கர்ப்பிணியான தமது சொந்தத் தமக்கையை 'சாத்தான்' என ஏசி கத்தியால் குத்திக் கொலைசெய்தார்"
இதுவே எனது குழப்பத்தை தெளிவித்த பத்திரிகைச் செய்தி.
துறவிகளால் இனங்காணப்பட்ட 'கோமாளி வேடம்' இரண்டு ஆண்டுகளுக்குள் வில்லத்தனமாக விசுவரூபம் எடுத்துவிட்டதா?
துறவியர் எனக்காகக் கூறியதாக தவறுதலாக என்னால் எடுத்துக் கொள்ளப்பட்ட கோமாளி வேடம், நான் சார்ந்த புலம்பெயர் தமிழர்களில் சிலரின் திடீர் மதமாற்றங்கள் பற்றியதா?
ஆம் அதுவே தான்.

டெனிஸ் சைவத் துறவியரின் எதிர்பார்ப்பில் கோமாளி வேடம் இல்லாத பாரம்பரியம் மிக்க தமிழ்ச் சைவர்களின் உண்மை வேடத்திற்கான பக்குவ நிலை எம்மவரை எப்படிச் சென்றடையக் கூடும்.?
இவ்வாறான சிந்தனையின் போது மனக்கண் முன் தோற்றம் தருபவர்கள் எமது புலம் பெயர் தமிழ்க் குழந்தைகளே!
அவர்கள் மேற்குலகின் அறிவியல் சிந்தனைக்கு ஏற்றாற்போல, தமது பெற்றோரிடம் எழுப்பும் பண்பாடு, வழிபாடு, கலாச்சாரம் பற்றிய சந்தேகங்களுக்கு அறிவியல் விளக்கம் அளித்துவர அவர்களது பெற்றோர்களே முன்வரல் வேண்டும். அப்போதுதான் தமிழராகப் பிறந்ததை இட்டு எமது பிள்ளைகள் மகிழ்வர்; தமது வழிபாடு கலாச்சாரங்களை மானசிகமாக ஆதரிப்பர்.
வெறுமனே நிறங்களைக் குழைத்து உடல் முழுவதும் பூசி நடனமிடும் காட்டுவாசிகளின் நவீன தோற்றமாக இல்லாது, தமிழர்தம் பாரம்பரியம் விஞ்ஞான காரணங்களுடன் அமைந்ததே என்ற அறிவியல் சீரணிப்பு பெற்றவர்களாகிய எம்மிடை எழவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வெறுமனே நிறங்களைக் குழைத்து உடல் முழுவதும் பூசி நடனமிடும் காட்டுவாசிகளின் நவீன தோற்றமாக இல்லாது, தமிழர்தம் பாரம்பரியம் விஞ்ஞான காரணங்களுடன் அமைந்ததே என்ற அறிவியல் சீரணிப்பு பெற்றவர்களாகிய எம்மிடை எழவேண்டும்.
தற்போதைய உலகின் அறிவியல் வளர்ச்சிக்குத்தக தம்மை புதுமை செய்து உலக அரங்கை அலங்கரிக்கும் தகுதிவாய்ந்தவர்களாக தமழர்களே மேன்மை பெறல் வேண்டும்.
அறிவியல் பூரணத்துவம் பெறாதவர்களிடை நிலவும் போட்டி, பொறாமை, பழிவாங்குகை போல அல்லாமல் சிறந்த பாரம்பரியப் பின்னணி கொண்டதே தமிழினம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உதயமாக, சகோதர வாஞ்ஞையுடனும், தியாக மனப்பான்மையுடனும் ஒன்று கூடல் வேண்டும்.
" நாங்கள் ஏன்தாம் பிறந்தோம்?" என்ற வினாவை எமக்குள் நாமே கேட்டுவரல் வேண்டும்.
போலிமை நீங்கி நாம் வணங்கும் தெய்வத்திடம் அன்பு (Love), நம்பிக்கை (Faith), அடைக்கலம் (Surrender), எய்திய பக்தர்களாகி ஆலயங்களில் ஒன்று கூடும்போது அகமும், முகமும் 'பளிச்' என்று துலங்கவேண்டும்.
ஆத்மிக தேட்டத்தில் நின்று எமது தாய் மண்ணின் சுதந்திரக் காற்றின் இனிய சுவாசத்திற்காகக் கூடிப் பிரார்த்தித்தல் வேண்டும்.
அதுவே, தமிழர்தம் சுகந்த மூச்சு.
பாண்டிய மன்னனின் தேவியின் கூந்தலில் இருந்து வீசிய நறுமணம் இயற்கையானதா? செயற்கையானதா? என்ற வாதில் " இயற்கையானதே" என்பதை நிரூபிக்க எமது இறைவனுக்கு நெற்றிக்கண்ணைக் காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாம்.
பண்டு தொட்டே இயற்கையான வாழ்வமைப்பில் பக்குவப்பட்ட தமிழினத்திற்கு 'சொந்தமான வாசனையும் உண்டு' (தமிழ் மணம்) என்பதை உணர்த்தப் புகுந்த கதைகளே இறைவன் திருவிளையாடல்கள் ஆகின போலும்.

(தொடரும்)

# விமர்சனம்

கட்டுரையாளர் கவிவேளம் பாரதிபாலன் அவர்களின் "தமிழரும் மதப்போரும்" என்ற ஆக்கத்தில் பல நல்ல கருத்துக்கள் இருந்தாலும் எங்கோ ஒரு மூலையில் சில கருத்துக்கள் இந்து சமயத்தை தாக்குவதாயும் தமிழர்கள் " முடமை தழுவிய பிற்போக்கான சிந்தனைக்குள்ளேதான்" இவர்கள் வாழ்வு இருந்த தென்கின்றார்.

தமிழர்கள் செயல் (அதாவது மதத்தின் பெயரில்) ஒவ்வொன்றும் விஞ்ஞான விளக்கங்களுடன் தானே இருக்கிறது. இதை வாசிக்கும் போது எமது முன்னோர்கள் எவ்வளவு விஞ்ஞான அறிவுடன் இருந்திருக்கிறார்கள். அதோடு எவ்வளவு சகல தாரதையும் பேணிப்பாதுகாத்திருக்கிறார்.

இது ஒரு புறமிருக்க புலம் பெயர்ந்தவர்கள் இந்து சமயம் என்பது பற்றி தங்கள் பிள்ளைகளுக்கு விளக்கம் கொடுக்க கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந் நிலையில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதோடு கூடுதலான இந்து சமயப் பெற்றோர்களின் மத மாற்றமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் இந்து சமயத்தில் இருக்கும் நன்மைகளையும் நல்லனவற்றையும் எடுத்துக் கூறலாம் தானே.

அதாவது எந்த ஒரு விடயத்தை எடுத்தாலும் உதாரணமாக விஞ்ஞானத்தையோ சமயத்தையோ, சமுதாயத்தையோ, அல்லது ஒரு மொழியையோ அதில் இரண்டு பக்கமும் உண்டு என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. இதைத் தான் வள்ளுவர் அறிவு உடமை, மெய் உணர்தல் என்ற அதிகாரங்களில்

" எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு"
" எப்பொருள் எத் தன்மைத்தாயினும் அப் பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்கிறார்.

ஒவ்வொரு மதத்தையும் எடுத்துக் கொண்டால், மதம் மனிதனை நல்வழிப்படுத்துவதற்காகவே தோன்றியது. மதத்தை ஒவ்வொருவரும் அணுகும் முறையில் தான் மதம் அவனில் முழுமை பெறுகிறது. உதாரணத்திற்கு ஒரு பழமொழி.

**கல்லைக் கண்டவன் நாயைக் காணான் (காண மாட்டான்)**
**நாயைக் கண்டவன் கல்லைக் காணான் (காண மாட்டன்)**

என்பது போல் மதம் அவனவன் சிந்தனையைப் பொறுத்தே அவனில் பிரதிபலிக்கும்.

கட்டுரையாளர் திரவங்களின் சுருங்காத இயல்பு என்று சொல்லிவிட்டு பாடலையே பிளையாக எழுதியிருக்கிறார். எழுத்துப் பிழையோ தெரியாது.

" கடவுளும் தம்போல் போக போக்கிய விற்பன்னர்" இதற்கு எத்தனையோ சான்றுகள் உள்ளது கடவுள் எப்படிப்பட்டவர் என்று. உதாரணம்:- சாதாரண ஒரு சித்தர் தன் பாட்டில்

கடவுளுக்குப் பெண்டேது பிள்ளையேது
காமகுணலீலை முதலானதேது
கடவுளுக்குப் பகிடி சீட்டுத் தாய மேது
காடுகளில் வேட்டைக்குத் திரவதேது
கடவுளுக்கு காமிகளின் தொழிலில்லை
காருண்யத் தொழிலொன்றே கடவுள் பாரம்.

கட்டுரையாளர் என்ன சொல்ல விழைகின்றார், அவரின் எண்ணம் தான் என்ன என்று ஒன்றுமே புரியவில்லை. இந்து சமயத்தை பல வகையான புறச்சூழல்களின் மத்தியில் புலம் பெயர்ந்தோரிடையே வேரூன்றச் செய்வதே பெரும் கஸ்டமாக இருக்கும் இக் கால கட்டத்தில் இந்து சமயத்தைப் பற்றி அதிருப்தியை உண்டாக்கும் இப்படியான ஒரு கட்டுரையை ஏன் எழுதுகிறார். அவர் பிற சமயத்தவரா? கட்டுரையாளரைக் குறை கூறுவது என் நோக்கமல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்து சமயத்தில் குப்பைகள் மட்டுமல்ல மாணிக்கங்களும் உண்டு என்பதை ஆசிரியர் அறிந்தால் நல்லது.

# தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியம் நடத்தும் கலாச்சாரவிழாவும், ஓவிய, கண்காட்சியும்

## பலரின் வேண்டுகோளிற்கு இணங்க இவ்வருடமும் சிறந்த பாடகர் போட்டியும் இடம் பெறவுள்ளது.

சிறந்த பாடகர் போட்டியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் எங்களுடன் அல்லது ஒரு இசைக்குழுவுடன் தொடர்பு கொள்ளவும்.

**இவ்வாண்டு (96) ஐப்பசி மாதம் நடைபெறவிருக்கும் ஒன்றியத்தின் கலாச்சார விழாவின் போது ஓவிய, கண்காட்சியும் நடைபெறவுள்ளது.**

**இதில் ஆர்வமுள்ள ஓவியக் கலைஞர்கள் மேற்படி கண்காட்சியில் பங்குபற்றி இலைமறை காய் போல் இருக்கும் தங்களது திறமைகளை வெளிக் கொணரும் வண்ணம் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.**

**ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை 30. 07. 96க்குப் பிந்தாமல் தபால் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

**ஓவியக் கண்காட்சியில் பங்குபற்றும் ஓவியர்களுக்கு போக்குவரத்துச் செலவு வழங்கப்படும்.**

விழா சிறப்புற நடைபெற கருத்துக்கள், ஆலோசனைகள் தெரிவிக்க விரும்புபவர்கள் எழுத்து மூலம் 30.07.96 ற்குப் பிந்தாமல் எங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*
*இதழின் கடைசிப் பக்கத்தில் உள்ளது*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பச்சைக்கிழியே..! சொல்லு...!!

பறந்துவந்த பச்சைக்கிளியே.....
சொல்லு ...!
பற்றியெரியும் என்..
தாய்மண் பற்றி செய்தி...
சொல்லு....!
ஆற்றம்கரை, ஆலமரமாய்...
அன்று...
வாழ்ந்த மக்கள்..இன்று
அடிக்கும்புயல் காற்றினிலே..
அலையும் சருகானதேனோ...?
என்று நீயும் சொல்லு......இந்த
உலகறிய நீயும் சொல்லு....

உயிரைவிட தாய்மண்..
உயர்ந்ததென்று எண்ணி..
உயிரைக் குண்டாய்மாற்றி..
எதிரிபடை,கப்பலெரிக்கும்...
எம்மறவர்படை பெருமை....
சொல்லு....!எம்மக்களறிய..
நீயும் சொல்லு...!

குண்டுமழையின் கீழே..
குந்தியிருந்து கணமும்..
கண்ணுறங்கா..(து)தாய்..
மண்ணைக்காக்கும்...
மறவர்செய்தி சொல்லு....!சொந்த
மண்ணுக்காக உயிர்கொடுத்த..
மாவீரர்கதை சொல்லு..இந்த
உலகமறியச் சொல்லு...!நீயும்
உயரப்பறந்து, சொல்லு...!

பள்ளிக்கூடம், கோயில்மீது....
பறந்துவந்து குண்டுபோட்டு...
சின்னம்சிறிய பாலகரை...
சிதறடித்து, கொன்றுகுவிக்கும்..
சித்தாத்தர் கொடுஞ்செயலை...
சிந்தையுள்ளோர் புரிந்திடவே...
பாரெல்லாம், சிறகடித்து.....
பறந்து, பறந்து, நீயும்
சொல்லு...

பட்டமர(ப்)பொந்தொன்றில்...
பதுங்கி நீயும்
இருந்தபோது...உனை
பற்றிவந்த என்பாட்டனிப்போ.....
படுக்கையிலே கிடந்தவேளை
தமிழா.....!
பண்பாடுதானும் காத்து.......பாட்டி
உணவூட்டும் நேரம்..
பாழ்படுவான் போட்டகுண்டு..
பாட்டன்,பாட்டி இருவரையும்
பாழடித்த கதையைக்கூறு...இந்த
பாரறிய நீயும் கூறு...
சட்டங்களைப் போட்டு....
சனத்தை சங்கடத்தில் மாட்டி..
பத்திரிகைக்குரல்வளையை...
பாரறியத்தான் நெரித்து ஆளும்
புத்தர்களின் ஆட்சிபற்றி..இந்த
புவியறிய நீயும்!,பறந்து
பறந்துகூறு.
புவியறிய நீயும் பறந்து பறந்து
கூறு.

*வேலணையூர் பொன்னண்ணா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "சுதந்திரம்" ஒரு கண்ணோட்டம்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தமிழர்கள் உள்ள அகதி நிலையம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். எதிர்பாராத விதமாக எனக்குச் சிறு வயதில் தெரிந்த ஒரு இளைஞனைக் காண முடிந்தது. இருவருக்கும் முதலில் அடையாளம் காண்பது சற்றுச் சிரமமாக இருந்தாலும் இறுதியில் கதைத்து விசாரித்ததில் எனது பள்ளித் தோழியின் மகன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. அத்தோடு கதையோடு கதையாக டென்மார்க் எப்படி இருக்கிறது என்றேன்? அதற்கு அவர் இங்கு 'நான் சுதந்திர மனிதன்" என்றார். அத்தோடு டென்மார்க்கின் வசதி, உரிமை, சுதந்திரம், சட்டம் என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போனார். இத்தனைக்கும் கையிலே ஒரு சிகரட், பொக்கற்றில் லைற்றர். "இங்கு எல்லோருக்கும் சுதந்திரம் இருக்கிறது, தான் நினைத்ததைச் செய்வதற்கு " என்றும் சொன்னார். அதோடு அவருக்கு இப்போது வயது 16. டென்மார்க் வந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது என்றார். 16 வயதில் அவரின் சுதந்திரத்தின் வரைவிலக்கணத்தைக் கேட்டு என்னை அறியாமலே என்னுள் ஒரு வேதனை. அந்த வேதனையின் பிரதிபலிப்புத் தான் இச் சிறு கட்டுரை.

"சுதந்திரம்" இது எத்தனை விதமான அர்த்தத்தைக் கொண்ட ஒரு சொல். சுதந்திரம் மனிதனின் ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் பிறப்புரிமை. ஒருவன் பிறக்கும் போதே இயற்கை அவனுக்கு வழங்கிய சுதந்திரத்தை மனிதன் தானாக ஆக்கிக் கொண்ட எந்தச் சட்டமும் விதியும் அதனைப் பறித்து விட முடியாது. சுதந்திரம் எல்லோருக்கும் உரியது. ஒவ்வொருவரும் பிறக்கும் போதே பெற்ற சுதந்திரத்தை வாழ்நாள் முழுவதும் நுகரும் உரிமையும் அவனுக்கு உண்டு. சுதந்திரத்தின் உரிமை என்றதும் எனக்கு ஒரு சிலேடைக் கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒருவர் சொன்னார் " உனது சுதந்திரம் மற்றவரின் மூக்கைப் பாதிக்கக்கூடாது" எனக்குப் புரியாத புதிராக இருந்ததால் சுதந்திரத்திற்கும் மூக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றேன். அதற்கு அவர் சொன்னார் நீ ஒரு தடியை வைத்து ஓடி ஓடி உன் இஸ்டம் போல் சுழற்றி விளையாடுகிறாய். ஒருவரும் வராவிட்டால் உனது சுதந்திரம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது. திடீரென்று ஒருவர் வந்து விட்டால் உனது சுதந்திரம் உடனே மட்டுப்படுத்தப்படுகிறது. அதுவும் அல்லாமல் எதிரில் வந்தவரின் மூக்கில் உன்தடி பட்டு விட்டால் உனது சுதந்திரமே பறி போய்விடும். ஒருவர் முன்னால் வந்தால் முதலில் தெரியும் உறுப்பு மூக்குத் தானே என்றார். கதை சிலேடையாக இருந்தாலும் ஆழ்ந்து சிந்தித்தால் எவ்வளவு கருத்து உடையது என்பதை அறிந்தேன். ஒருவருடைய சுதந்திரம் இன்னொருவரைப் பாதிக்கும் போது அவரின் சுதந்திரம் அற்றுப் போய் விடுகிறது.

அத்தோடு தனி மனித சுதந்திரம் அத்தனி மனிதனையும் உள்ளடக்கிய சமூக நலனுக்காக எல்லைப் படுத்த வேண்டியதாகிறது. அவ்வாறு தனி மனிதன் தனது சுதந்திரத்தை எல்லைப் படுத்தாது தான் தோன்றித்தனமாக நடந்தால் சமூகம் அழிந்து அவனும் அழிய நேரிடும். சமூகம் அழியாது நிலைபெற மனச்சான்று, சமய விதிகள், சட்டங்கள், புராணக் கதைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திரத்திற்கு சில வரையறைகளை மனிதனே ஏற்படுத்திக் கொள்கிறான். இதனால் தான் மகாகவி பாரதியார் " தன்னைக் கட்டுதல்" சுதந்திரம் என்றார். தன்னைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுதல் என்றால் உண்மையில் சுதந்திர இழப்பாகாது. நான் முன் கதையில் கூறியது போல் பிறருடைய சுதந்திரத்தில் தலையிட முயன்றால் பிறர் எமது சுதந்திரத்தில் தலையிட முயல்வர். எனவே முடிவில் அனைவரும் சுதந்திரத்தை இழக்க நேரிடும். மனித சுதந்திரங்கள் எண்ணற்றவை. எனினும் நடைமுறை வசதிகளுக்காக அரசியல் யாப்புகளில் அவை வரையறை செய்யப்படுவது மரபு. இவற்றில் சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், வெளியீட்டுச் சுதந்திரம் போன்றன அடிப்படைச் சுதந்திரங்களாகக் கொள்வர். ஏனைய சுதந்திரங்கள் இவற்றில் இருந்து கூடுதலாகப் பிறப்பதால் இவற்றை அடிப்படைச் சுதந்திரமாக கொள்வர்.

சட்டப் புத்தகத்தில் மட்டும் எழுதி விடுவதால் சுதந்திரம் என்ற ஒப்பற்ற தத்துவம் உயிர்ப்படைய முடியாது. சட்டப் புத்தகத்தில் இருப்பது வெறும் உடல் தான். நடைமுறைச் செயற்பாடுகளே சுதந்திரத்தின் உயிர் மூச்சாகும். இன்று எம்மவர்களிடையே உள்ள பிள்ளைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை சட்டமே சுதந்திரம், உரிமை என்ற தவறான கருத்து நிலவுவது வருந்தத்தக்கதாகும். நான் சுதந்திர மனிதனாக வேண்டுமென்றால் எனது சுதந்திரம் மற்றவர்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதை ஓரளவாவது அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு குடும்பத் தலைவி சொன்னார், எனக்கும் சட்டத்தில் எல்லா சம உரிமையும் (50 க்கு 50) உண்டு என்றார். எனது கணவர் அதற்கு ஏற்க மறுத்தால் நான் விவாகரத்து செய்யத் தயார் என்றார். அவர் விவாகரத்துச் செய்வதால் குழந்தைகளின் நிலை என்ன ?. அவர்களின் மனம் எவ்வளவு பாதிப்படையும் ?, குடும்பம் சின்னாபின்னமாகும் என்பதைப் பற்றி யோசித்தால் குடும்பத்தில் மற்றவர்களின் சுதந்திரமும் அதில் பாதிக்கப்படுகிறது. எங்கள் கலாச்சாரத்தைப் பொறுத்த வரை பெரும் பாதிப்பு என்று தான் சொல்ல வேண்டும். இந்த இடத்தில் சட்டம், உரிமை என்ற இரண்டும் சேர்ந்து குடும்பத் தலைவியின் சுதந்திரமாக உருவெடுத்து குடும்பத்தையே சந்தியில் கொண்டு போய் விடுகிறது. இளம் சந்ததியினரை எடுத்துக் கொண்டால் அவர்கள் சொல்லுகிறார்கள், பெற்றோர் அவர்கள் விடயங்களில் எல்லாம் தலையிடுகிறார்கள் என்ற குறை. எங்களுக்கு இந்த நாட்டில் "சுதந்திரம்" இருக்கிறது. நாங்கள் நினைத்ததையெல்லாம் (அதாவது மனம் போனபடி) செய்வதற்கு. பொதுவாக எல்லோருக்கும் "சுதந்திரம்" வேண்டும் டென்மார்க்கில், யாரிடமிருந்து ?

**"கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினால்**
**கைகொட்டிச் சிரியாரோ"**

என்றார் பாரதியார். தாய் மண்ணில் வாங்க வேண்டிய சுதந்திரத்தை தவற விட்டு விட்டு இங்கு வந்து எல்லோரும் அகதிகளாக இருக்கிறோம். அதற்குள் எங்களுக்குள் நாங்களே சுதந்திரம் வாங்க ஆசைப்படுகிறோம். அதாவது பெற்றோர்களிடம் இருந்து பிள்ளைகளுக்குச் "சுதந்திரம்" வேண்டும். கணவனிடமிருந்து மனைவிக்குச் "சுதந்திரம்" வேண்டும். அண்ணனிடம் இருந்து தங்கைக்குச் சுதந்தரம் வேண்டும். இதுவா எங்கள் சுதந்திரத்தின் லட்சணம். எங்கள் கிராமத்தில் ஒருவர் "நம் நாட்டவர் அல்ல" தன் பிள்ளைக்கு அடித்த குற்றத்திற்காக மறியல் இருந்தார். இன்னொருவர் கேட்டார், ஏன் பிள்ளைக்கு இவ்வளவு கடுமையாக அடித்தீர் என்றதற்கு, அவர், நான் கடுமையாகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தண்டிக்காவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் நான் இருக்கும் இடத்தில் என் மகன் இருப்பான் என்றார்.

"தனக்குத் தானே தலைவன் ஆகாத எவனும் சுதந்திரமானவனல்லன்" என்றார் ஓரறிஞர். தனக்குத் தானே தலைவனாதல் என்பது பிறருடைய நெருக்குதல் இன்றி பிறருக்குத் துன்பம் வராமல் தனது மனச்சாட்சிப்படி ஏற்றவற்றைச் செய்யும் உரிமையும் ஏற்காதவற்றை விலக்குவதும் ஆகும். இதுவே உண்மைச் சுதந்திரம் ஆகும். இவ்வாறு ஒருவன் சுயமாகச் சிந்தித்து தனது தேவைகளுக்கேற்ப செயற்படும் போது அவனின் வளம் சிறக்கும். ஒருவனின் ஆற்றல், அறிவு, பண்புகள் என்பனவற்றை விருத்தி செய்ய உதவும் சுதந்திரமே உண்மைச் சுதந்திரமாகும். முன்னேற்றம், அறிவு, ஆற்றல் என்பவற்றை வளர்த்தல், சுதந்திரத்தின் பண்பும் பயனும் ஆகும்.

எங்களுக்கு ஒவ்வாதவைகளை நாங்கள் சுதந்திரம் என்ற போர்வையில் பெறுவோமானால்

**"காகம் அன்னநடை நடக்கப் போய்**
**தன்னடையும் கெட்ட கதையாய் ஆகிவிடும்.**

*திருமதி. ம.கந்தன்*

# ஒளவையார் மதுவும் மாமிசமும் புசித்தாரா ?

இவ் விமர்சனமானது கற்பகம் இதழ் 5 வெளியாகும் முன்பு எங்களுக்கு கிடைத்துவிட்டது. ஆனால் எழுதியவர் யார் என எழுதவில்லை. ஒருசில மாதங்களின் முன்பு எழுதியவர் எங்களுடன் தொடர்பு கொண்டார்.
காலம் தாமதித்தாலும் கருத்துக்கள், கருத்துக்கள் என்பதன் அடிப்படையிலும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதனாலும் இம்முறை இவ் விமர்சனத்தை வெளியிடுகிறோம்.

**கற்பகம் இதழ் 4 இல் ''தமிழருக்கு ஐரோப்பியக் கலாச்சாரம் அவசியம்'' என்ற தலைப்பில் பக்கம் 25 இல் ''ஊனும் புலாலும் தந்து உபசரித்த வேந்தே''**

தமிழ் மூதாட்டி ஒளவையார் மது அருந்தி மாமிசம் புசித்தார் என்று பழந்தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன என்று குறிப்பிட்டு இருக்கிறார் ஒரு அன்பர். அவர் அதில் பழந்தமிழ் இலக்கியம் என்று எதைக் குறிப்பிடுகிறார் அல்லது எங்கே, ஏவரால் என்பது போன்ற விபரமும் தரப்படவில்லை. மது அருந்துதல், மாமிசம் புசித்தல் பிழை என்று நான் சொல்ல வரவில்லை. 'ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை நல்வழி, வாக்குண்டாம் என்று பல நூல்களைப் பாடிய ஒளவையாரா மது, மாமிசம் புசித்தார் என்று எழுதியதை என்னால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆத்தி சூடியில் "காப்பது விரதம்" என்கிறார். அதாவது பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் அவைகளைக் காப்பாற்றுவதே விரதமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்றை வேந்தனின் "நோன்பென்பதுவே கொன்று தின்னாமை, புலையும் கொலையும் களவுந்தவிர் என்கிறார். அதாவது நோன்பு என்றால் - தவம் என்று சொல்லப்படுவது, கொன்று தின்னாமை - ஒரு சீவனை வதை செய்து அதன் மாமிசத்தை தின்னமையேயாம்.

புலால் உண்ணுதலையும் (புலால் என்றால் ஏதாவது ஒரு உடம்பு ) சீவவதை செய்தலையும் பிறர் பொருளைத் திருடுதலையும் நீ செய்யாது ஒழித்து விடு.

அடுத்து இவர் பாடிய நல் வழியில் ஒருவரின் உடம்பைப் பற்றிப் பாடும் போது இப்படிப் பாடியவர் தன் உடம்பை வளர்ப்பதற்கு பிறிதொரு உடம்பைப் புசித்திருப்பாரா ? இல்லை.

I. **எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு**
**பொல்லாப் புழுமலிநோய் புன் குரம்பை - நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் கமல நீர் போற்**
**பிறந்திருப்பார் பேசார் பிறர்க்கு**

II. **இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே**
**இடும்பொய்யை மெய்யென்றிராதே - இடுங்கடுக**
**உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்**
**விண்டாரை கொண்டாடும் வீடு.**

1. இவற்றின் விளக்கம் என்னவென்றால் சகல விதங்களினாலும் ஆராயுமிடத்து இந்தச் சீரம் பொல்லாத பழக்கங்களும், நிறைந்த வியாதிகளுக்கு புல்லிய ஒரு சிறு வீடாக இருக்கிறது. நல்லறிவினோர்கள் இவ்வுடம்பினியிலைவை அறிந்திருப்பார். ஆதலினால் அவர்கள் தாமரை இலைமேல் நீர் போல் கூடாதிருப்பார். பயன் படாமையால் பிறருக்கு இந்த நிலைமையைச் சொல்லுவார்கள்.

2. நிலையில்லா உடம்பு உள்ள பொழுது சற்பாத்திரத்திலே தானம் செய்வதற்கு அந்தத் தருமத்திலே சற்குருவிணது திருவருளும் அந்தத் திருவருளினாலே ஞானமும் அந்த ஞானத்தினாலே முத்தியும் சித்திக்கும்.
இவ்வளவும் பாடிய ஒளவையார் ஒரு காலும் மதுவும் மாமிசமும் புசித்திருக்க மாட்டார். எழுதிய அன்பர் பிழையாக விளங்கி விட்டார். அப்படி இல்லாவிட்டால் "உபதேசம் உனக்கல்ல ஊருக்கு" என்ற கதையாகி விடும் ஒளவையாரின் பாடல்கள்.

**"ஊனும் புலாலும் தந்து உபசரித்த வேந்தே"**
**ஊண் - உணவு**
**புலால் - ஊன் - உடம்பு உடல் இறைச்சி தசை.**
இதைத் தான் திருவள்ளுவர் புலால் மறுத்தல் என்னும் அதிகாரத்தில்

"தன் **ஊன்** பெருக்கற்றுத் தான் பிறிது **உனுண்பான்** எங்ஙனம் ஆளும் அருள்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன் சதையைப் பெருக்குவதற்குத் தான் பிறிதோர் உயிரின் தசையைப் பெருக்குவதற்குத் தான் பிறிதோர் உயிரின் தசையைத் தின்கின்றவன் எப்படி உயிர்களுக்கெல்லாம் அருள் செய்பவனாக இருக்க முடியும்.

அதிகமான் என்னும் அரசன் தனக்குக் கிடைத்த நெல்லிக் கனியை ஔவையாருக்குக் கொடுத்தான். இந்த நெல்லிக் கனியை உண்டால் அதிக காலம் வாழ்ந்து தமிழைப் பாட வேண்டும் என்பது அதிகமானின் விருப்பம்.

இதனால் தான் அவர் பாடுகிறார் உணவையும் உடம்பையும் தந்த வேந்தே என்று. நீண்ட காலம் வாழக்கூடிய நெல்லிக் கனி உனக்குக் கிடைத்ததும் அதை நீ சாப்பிடாமல் எனக்கு என் உடம்பை பாதுகாப்பதற்காக எனக்கு அளித்தாய். விளக்கம் இப்படி இருக்க ஔவையார் மது மாமிசமும் புசித்தார் என்ற பொய்யான விளக்கத்தையும் கொடுத்திருக்கிறார்.

ஆன்றோர்களையும் அவர்களின் நூல்களையும் பின்பற்றி எத்தனையோ பேர் வாழ்கின்றார்கள். இவர்களின் மத்தியிலே ஔவையார் மது, மாமிசம் புசித்தல் என்ற பொய்யான சந்தேகத்தைக் கிளறி விட்டு விட்டீர்கள்.
அத்துடன் புற நானூறு என்ற நூலில் இருந்த வரிக்கும் சரியான விளக்கம் எழுதவில்லை. முடிந்தால் தயவு செய்து அதன் விளக்கத்தையும் அடுத்த இதழில் தரவும்.

*சு.க. பாரி*

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

**Flygtniges Psykiske Kriser i Eksil Land**

என்ற புத்தகத்தை வேண்ட விரும்புபவர்கள்

**S.Ram, Svendsgade 58, 7100 Vejle** , என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**Go´dag Danmark,**
என்ற புத்தகம் தமிழில் வெளிவந்து விட்டது வேண்ட விரும்புபவர்கள்
SPF A/S
Th. Nielsensgade 95
740 Herning
Tlf. 97 12 84 33.Fax 97 21 01 07 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விடி பொழுது

எங்களின் வானம்
இன்னும் ஒரு முறை
இருண்டு போனது !
குண்டு துளைத்ததில்
இரத்தம் சிந்தி
உதிர்ந்து போன என்
மானிடப் பூக்கள் !
பரந்த வானில்
அதிர்ந்து போனது !
புட்களின் கூட்டம் !
வைகறைப் பொழுதில்
துயில் எழு மலர்கள்
குண்டொலி கேட்டு
மலராதிருந்தது !
அழுகுரல் கேட்டு
ஆறுதல் கூற
அடுத்தவர் இல்லை !
மஞ்சளாய்ப் பழுத்த
மரங்களின் இலைகள்
சொரிந்து எங்கும்
குப்பையையாய்க் கிடந்தது !
விடி பொழுதாகி
என் நாள் விடியும்
கொலைகளின் விதைகள்
முளையாதிருக்க
விதைகளை அறுத்து
தரையினில் எறிவோம் !

*–காளமேகம்–*

25-01-96



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Formidlingskursus For Flygtninge

Det er vigtigt at oplyse og informere, når danskere og flygtninge skal forstå hinanden. Kendsab til kultur, historie og baggrund giver mulighed for at vi forstår og respekter hinanden, og er med til at nedbryde myter og fordomme.

Dansk Flygtningehjælp og flygtninge, der er blevet rimeligt gode til dansk, bliver jævnligt opfordret til på skoler, uddannelsesinstitutioner, i boligforeninger o.s.v at fortæller om flygtningesituationen. Det kan gøres, eller formidles, på mange måder.

Derfore invitere Dansk Flygtningehjælp i Ringkjøbing og Viborg Amter interesserede flygtninge til at deltage i et kursus, hvor vi arbejder med at formidle oplysning til danskere.

Kurset er gratis, og vil finde sted i Midtjylland i løbet af sommeren. Kurset henvender sig både til flygtninge, som har erfaring med formidlling, og de som gerne vil i gang med det.

Nærmere oplysning hos:

**Villy Madsen, D.F. i Holstebro, tlf 97403122, eller Per Ryevad, D.F. i Herning, tlf. 97214183**

**அகதிகளே !**

**உங்கள் பின்னணி, பிரச்சினை என்ன ? இவற்றை டெனிஸ் மக்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறீர்களா ?**

## இதற்கான விசேட பயிற்சி

டெனிஸ் மக்களும், அகதிகளும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வது மிக முக்கியமாகும். இதற்கு இரு பகுதியினருக்கும் இடையில் சரியான முறையில் செய்தி பரிமாற்றம் ஏற்படவேண்டும். ஒருவருடைய கலாச்சாரம், சரித்திரம், பின்னணி என்பவற்றை மற்றவர், அறிந்து கொள்வதனால் தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் மரியாதை பண்ணவும், தேவையற்ற கற்பனை, தற்பெருமை, பொறாமை என்பவற்றை குறைத்துக் கொள்ளவும் முடியும்.

உங்களுக்கு நியாயமான அளவு டெனிஸ் மொழி தெரிந்திருக்க வேண்டும். பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், வதிப்பிட ஒன்றியங்கள் வேறுபல நிறுவனங்களுக்கு அகதிகளின் நிலை, கலாச்சாரம், சரித்திரம், வேறுபல விடயங்களில் உரையாற்றக்கூடியவர்கள் தேவை. இவ்வாறு உரையாற்றுவதற்கும் தொடர்பாளர்களாகவும் இருப்பதற்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதன் அடிப்படையில் டெனிஸ் அகதிகள் உதவிச்சங்கமானது பயிற்சி வகுப்பை வெகு விரைவில் நடத்தவள்ளது. **இப் பயிற்சியானது இலவசமாகும்.** Ringkjøbing, Viborg மாவட்டப்பகுதியில் வசிக்கும் அகதிகள் விண்ணப்பிக்கலாம்.

**மேலதிகவிபரங்களுக்கு:-**

**Villy Madsen, D.F. i Holstebro, tlf 97403122, eller Per Ryevad, D.F. i Herning, tlf. 97214183**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடவுச்சீட்டுப் பிரச்சனையா ?

**ஆம்**

**எங்களால் இயன்றவரை உதவி செய்வதற்காகவே இவ்வறிவித்தலைத் தருகின்றோம்.**

கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக அகதி அந்தஸ்து அல்லது டென்மார்க்கில் வாழ்வதற்கு அனுமத கிடைத்தவர்களில் பலருக்கு இலங்கை கடவுச்சீட்டோ அல்லது டென்மார்க்கினால் வழங்கப்படும் வெளிநாட்டவருக்கான கடவுச்சீட்டோ இல்லை. இதன் அடிப்படையில் உங்களிடமிருந்து பின்வரும் தகவல்களைத் திரட்டி டெனிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இப்பிரச்சனையை தீர்க்க விரும்புகிறோம். நீங்கள் போதியளவு தகவல்களைக் கொடுத்து உதவினால் மட்டுமே எங்களால் உதவி செய்ய முடியும்.




## பின்வரும் தகவல்களைத் தந்து உதவுங்கள்

உங்கள் பெயர், விலாசம், Udl.nr, CPR nr, அகதி அந்தஸ்து அல்லது டென்மார்க்கில் வாழ்வதற்கு அனுமதி கிடைத்த திகதி, கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தூதுவராலயத்துடன் தொடர்பு கொண்டீர்களா? அப்படியாயின் அவர்களின் பதில் என்ன ? டென்மார்க்கில் டெனிஸ் அகதிகள் உதவிச்சங்கத்துடன் தொடர்பு கொண்டீர்களா? அவர்களின் பதில் என்ன? டென்மார்க்கில் வேறு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டீர்களா? அவர்களின் பதில் என்ன ?. உங்களுக்கு தெரிந்தவர்கள் இப் பிரச்சினையில் இருப்பின் அவர்களையும் தொடர்பு கொள்ளச் செய்யுங்கள்.

**இவற்றை எங்களுக்கு பின்வரும் விலாசத்திற்கு எழுதி அனுப்பவும்.**

**Tamilsk Dansk Venskabsforening**
**P.O.Boks 103**
**7400 Herning**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டென்மார்க்கின் வெளிநாட்டவர் கொள்கை 1983 ல் இருந்து இன்றுவரை

## முன்னேற்றகரமானதா அல்லது பின்னோக்கியதா?

7

– எப ஸ்ரங்.

–முன்னைய இதழில் வெளிவந்த டெனிஸ்தொடர்ச்சியின் தமிழாக்கம்.

Ninn Hansen

வெளிநாட்டவர் சட்ட ஆலேசனை பாராளுமன்றத்திலும், சட்டக்குழுவிலும் மற்றும் பாராளு–மன்ற நிர்வாக தலைவரிடமும் கொண்டுவரப்பட்டபோது ஒருவரும் தொடவிரும்பவில்லை. இந்த நேரத்தில் De Radikale கட்சி V-K அரசாங்கத்தில் 88ல் சேர்ந்திருந்தது. இந்த மூன்று கட்சிகளும்கூட இந்த விடயத்தில் ஒரே கருத்துக்கொண்டிருக்கவில்லை.

5. 1991 ஆனி 1ல் டென்மார்க் ஐரோப்பிய அகதிகள் சாசனத்தில் இணைந்தது. 1986 ல் டென்மார்க் ஏற்கனவே வெளிநாட்டவரை மட்டுப்படுத்த ஐரோப்பியநாடுகளுடன் இணக்கத்தில் இருந்ததால் இது பெரியஅளவில் எதுவும் பெறவில்லை. இன்னமும் பல நாடுகள் இந்த இணக்கத்தில் இணையாததால் மேற்கொண்ட விடயங்கள் இன்னமும் நடைமுறையில் வரவில்லை.

இறுக்கமும் ஒரு முன்வைப்பும்.

6. 1990 மார்கழியிலிருந்து Konservative ம் Venstre ம் தனியே அரசாங்கத்தில் இருந்தன. முற்கோடையில் 1992ல் இவர்கள் குடியேறியோர்களது குடும்பஇணைப்பு உரிமையை கட்டுப்படுத்தும் பெரும் ஆலோசனையைக்கொண்டுவந்தார்கள். Ninn Hansenன் 1987ல் ஏற்படுத்திய பிரச்சனை Socialdemokratiet தலையீட்டால் Hans Engell க்கு 1992ல் வாய்ப்பாகிவிட்டது. கட்டுப்பாடுகளை கொண்டுவரும் ஆலோசனையில் பாராளுமன்றத்தில் ஞுழஉஎயைடணநஅழமசயவநைவ முன்வைத்த ஆலோசனைக்கு பதிலாக ஓர் உடன்பாடு கொண்டனர்.

இக்கட்டுப்பாடுகள் குடியேறியோர்களை பெரிதும் பாதித்ததோடு பிறப்பாலுள்ள டெனிஸ்மக்கள் வெளிநாட்டவர்களை காதலிப்பவர்களுக்கும் பாதீப்பை உண்டுபண்ணியது.

அ. குடும்பஇணைப்பை வரும்புவோர் இப்போது வயதுமுதிர்ந்தபெற்றோரை மட்டுமல்ல கணவன்–மனைவி, குறைந்தவயதுப்பிள்ளைகள் அவர்களைப்பராமரிக்கும் பொறுப்பை எடுக்கவேண்டும். பொறுப்புடையவரரென்பதை நகரசபையும் வெளிநாட்டவர்திணைக்களமும் உறுதிப்படுத்தும் பத்திரம் சமர்ப்பிப்பதோடு கூடிய வருமானமும் நிரந்தரவேலையும் இருக்கவேண்டும்.

ஆ. வெளிநாட்டுக்கணவன் அல்லது மனைவி வர இங்குள்ளவர் 5 வருடங்கள் நிரந்தரமாக வசித்திருக்கவேண்டும்.

இ. குடும்ப இணைப்பில் இங்கு வரும் தம்பதியர் 2 வருடத்திற்குள் திருமணஉறவில் பிரிவு ஏற்பட்டால் திருப்பியனுப்பப்படும் சட்டம் 3 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

ஈ. குடும்பஇணைப்பு தம்பதியர் இருவரும் 18 வயது நிரம்பியிருக்கவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உ. அகதிகள் மட்டத்தில் விண்ணப்ப பரிசீலனை காலம் நீடிக்கப்பட்டுள்ளது.
ஊ. வெளிநாட்டவருடைய சிறைவாய்ப்பு அதிகரித்தல்.
இந்தக் கொள்கைகெதிராக SFம் De Radikaleம் எதிராகவாக்களித்தனர்.

இடமாற்றமும் புதிய கட்டுப்பாடுகளும்.

7. 1993ல் Socialdemokratisk தலைமையிலான DE Radikale இணைந்த அரசை பெற்றோம். வெளிநாட்டவர் நிர்வாகம் உள்நாட்டமைச்சுக்கு மாறியது. முன்பு வெளிநாட்டவரது பிரச்சனைக்குப்பொறுப்பாகவிருந்தவர் அமைச்சரானார். அவர் அகதிகள்நிலயங்களை ஏற்படுத்த நகரசபைகளை கேட்டுக்கொண்டார். அவர் பொருளாதார மந்தங்கொண்ட மீள்நிலைப்படுத்தும் தேவையற்ற கொள்கையை முன்வைத்தார். இதனால் இச் சட்டம் சொந்த நாடுகளுக்கு திரும்புவோரது வாய்ப்புக்களை பாதித்தது.
8. ஆனி மாதத்தில் 1992 ல் கிடைத்த புகலிட வண்ணப்பங்களின் பரிசீலனையில் சம்பள செலவீனங்களை கொண்ட Per Sørensen குழுவும் பரிசீலிப்பதில் ஈடுபட்டதால் மேலும் கட்டுப்பாடுகள் அதிகமாயின. இறுதி மனுக்கள் வெளியேற்றப்படும் காலகெடுக்களை வழங்கியது.

டெனிஸ்வெளிநாட்டவர் சட்டம் நாளுக்குநாள் இறுக்கப்படு வந்துள்ளதுடன் டெனிஸ்மக்கள் மத்தியில் வெளிநாட்டவர் பற்றி முரண்பாடாகவே வளர்ந்து வந்துள்ளன. சிறுபான்மை டெனிஸ்மக்களே வெளிநாட்டவர் வருவதை ஏற்றுக்கொண்டனர். 1983 சட்டம் மனிதாபமான நிலையைக்கொண்டிருந்தாலும் அமைச்சரும் நகரசபைமுதல்வரும் எடுக்கும் நிலைப்பாடு டெனிஸ்மக்கள் மத்தியில் பெரும் பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு விடயங்களை படம்போட்டுக்காட்டமுடியும். அதாவது பாலஸ்தீனியர்சட்டம், யுகோஸ்லாவியர்சட்டம். பாராளுமன்றம் இரண்டுதடவை குறுகிய அளவு புகலிடவிண்ணப்ப பரிவினருக்காக சட்டம் கொண்டுவந்தது. 1992 பங்குனியில் முதல்தடவையாக பாலஸ்தீனியர்களுக்காகவும், கோடை பிற்பகுதியில் யுயோஸ்லாவியர்களுக்காகவும் கொண்டுவந்தது. முன்னைய யுயோஸ்லாவிய ஒருபகுதியினர் வீசா இல்லாமல் இலகுவாக டென்மார்க் வர வாய்ப்பிருந்தது. 1993 ஆனியில் போஸ்னியாவிலிருந்து வருபவர்கள் வீசா பெறவேண்டுமென சட்டம்கொண்டுவரப்பட்டது.

இந்த வருடம் அகதிகள்விண்ணப்பங்கள் பரிசீலித்து தற்காலிக அனுமதிவழங்கத் தொடங்கி உள்ளனர். பொஸ்னியாவைப்பற்றிய தலைப்பு ஏனைய தலைப்புக்களை விட டெனிஸ்வெளிநாட்டவர் கொள்கையில் நான் இங்கு முன்வைத்த விடயங்களில் மிகப்பெரிய தொன்றல்ல. இதற்குப் பதிலாக இதற்கான புதிய கருத்தரங்கை வைக்கவேண்டும்.

**EBBA STRANGE (SF)** மேற்கூறிய கருத்தரங்கை 25–02.95 ல் **LDF´s** வருடாந்த கூட்டத்தில் முன்வைத்தார்.

முற்றும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழில் கம்பியூட்டர் வகுப்பு

கம்பியூட்டர் பற்றிய அடிப்படைக்கல்வி, மற்றும் பாவனை முறைகள், தொழில்நுட்ப விளக்கங்கள் உள்ளடக்கிய தொகுப்புக்கல்வி மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.



பாடஉள்ளடக்கங்களாவன:

கம்பியூட்டர் உருவாக்கம், இயங்கும் முறை
**DOS**
**WINDOWS**

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 3 மணித்தியாலங்கள் மாலை 6.30 முதல் 9.00 வரை 10 வாரங்கள் மொத்தம் 30 மணித்தியாலங்கள்.

ஆரம்பம் : **04.09.1996** மாலை 6.30
இடம் : **IKAST HANDELSSKOLE**
கட்டணம் : **500 KR.**

குறிப்பிட்ட இடங்கள் மட்டுமே உள்ளதால் வகுப்புக்களில் சேர விண்ணப்பங்களை 30.06.1996க்கு முன்னதாக பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கும், வகுப்புக்கள் தொடர்பான விபரங்களுக்கும், தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**IKAST HANDELSSKOLE**
**BØGILDVEJ 12**
**7430 IKAST**

Peter Hven அல்லது Kugan Tlf: 97 15 25 66
97 25 09 17 (Kugan)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவர் பகுதி

**அன்பான சகோதர சகோதரிகளே,**

இந்த மாதிரி வினாத்தாள் மூலம் உங்களை சிறுவர் பகுதி அங்கத்திற்கு அழைக்கிறேன். இவ் வகையான மாதிரி வினாத்தாள் உங்களை பரீட்சைக்கு தயாராக்கவும், தெரியாத விடயங்களை உட்கிரகிக்கும் நுழை வாயிலாகவும் உள்ளது. 1996 ம் ஆண்டு புரட்டாதி மாதம் நடைபெற விருக்கும் போட்டிப் பரீட்சைக்கு இவ்விதமான கேள்வி முறைகளையே நாம் பெரிதும் பயன்படுத்துவோம் என்பதை மாமா தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்படின், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தொடர்பு கொண்டால் விடையை மிக விரைவில் மாமா எழுதி அனுப்புவார்.

அத்துடன் உங்களது விடைகளை, மிகவும் தெளிவாக எழுதி கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பினால், Children chanal மாமா திருத்தி அனுப்பி வைப்பார்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**

**Children Chanal, Svendsgade 58, 7100 Vejle.**

**மாதிரிப் போட்டிப் பரிட்சை - 3 -1996**

**1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து பத்து வசனங்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. பசு 2. கிளி 3. எனது பாடசாலை
4. நான் விரும்பும் பெரியார்

**புள்ளி 10 X 2 = 20**

**2. பிழைகளைத் திருத்தி எழுதுக**

**உ + ம் : - மறவணை = மணவறை**

1. துறப்பு ..............................
2. தவக்கை ..............................
3. இப்ப ..............................
4. சவுக்காரம்..............................
5. ஏப்பை ..............................
6. நித்திறை ..............................
7. வாறேன் ..............................
8. தாவாரம் ..............................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



9. பொக்களம் ..........................
10. தேள்வை ..........................

புள்ளி 10 x 2 = 20

**3. சொற்களை சேர்த்து எழுதுக.**

**உ + ம் : – மரம் + வேர் = மரவேர்**

1. மூன்று + நூறு = ..................................
2. வயிறு + வலி = ..................................
3. கிணறு + நீர் = ..................................
4. ஆடு + கால் = ..................................
5. பனை + ஓலை = ..................................
6. ஆல் + பழம் = ..................................
7. கல் + தூண் = ..................................
8. ஆல் + இலை = ..................................
9. கண் + ஒளி = ..................................
10. பொன் + காப்பு = ..................................

புள்ளி 10 x 2 = 20

**4. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சூரியன் எந்தத்திசையில் உதிக்கும் ?
2. பெண் கோழியை நாம் எப்படி அழைப்போம் ?
3. ஆண் கோழியை எப்படி அழைப்போம் ?
4. கிளி எந்த இனத்தைச் சேர்ந்தது ?
5. கோழி எந்த இனத்தைச் சேர்ந்தது ?

புள்ளி 5 x 3 = 15

**5. பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து கீழே தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

**ஆடு**

ஆடு இரு வகைப்படும். அவை வெள்ளாடு, செம்மறியாடு என்பனவாகும். ஐரோப்பிய நாடுகளில் செம்மறியாடுகள் அதிகம். செம்மறியாட்டின் இறைச்சியை வெள்ளை இனத்தவர்கள் விரும்பி உண்பார்கள். வெள்ளாடுகளில் ஆண், பெண் இரண்டிற்கும் தலையில் இரு கொம்புகள் உண்டு. வெள்ளாட்டின் பால் உடம்புக்கு மிகவும் நல்லது. ஐரோப்பிய நாடுகளில் செம்மறியாடுகளை இறைச்சிக்காக வளர்க்கின்றார்கள். ஆனால் நமது நாட்டில் சிலர் வெள்ளாடுகளை அவற்றின் இறைச்சிக்காகவும், பாலுக்காகவும் வளர்க்கிறார்கள். ஆட்டின் பிழுக்கை தோட்டத்திற்கு எருவாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. ஆடுகளில் எத்தனை வகையுண்டு ?
2. ஐரோப்பிய நாட்டவர் எவ்வகையான இறைச்சியை விரும்பி உண்பர் ?
3. ஆட்டில் இருந்து நாம் பெறும் விசேசமான பொருள் என்ன ?
4. சிலர் வெள்ளாடுகளை ஏன் வளர்க்கிறார்கள் ?
5. ஆட்டெரு எதற்கு உபயோகப்படுகின்றது ?

**புள்ளி 5 x 4 = 20**

**6. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

1. வெள்ளாட்டின் பால் உடம்பிற்கு மிகவும் நல்லது (............)
2. ஆட்டின் பிழுக்கை தோட்டத்திற்கு எருவாகப் பயன்படுத்தலாம் (...........)
3. வெள்ளாடுகளில் ஆண் இனத்திற்கு மட்டும் கொம்பு உண்டு (...........)
4. நமது நாட்டில் ஆட்டினை பாலுக்காக மட்டும் வளர்க்கின்றார்கள் (.........)
5. ஆட்டில் இரண்டு வகை உண்டு (..........)

**புள்ளி 5 x 1 = 5**

**சிறுவர் பகுதியின் ஒருவருடபூர்தியை முன்னிட்டு விசேட போட்டி. பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை எழுதி அனுப்பும் மூவருக்கு பரிசில்கள் Children Channel வினால் அனுப்பி வைக்கப்படும்.**

1. உலகின் மிகப் பெரியதீவு எது ?
2. Færøerne எத்தனை கற்பாறைகளைக் கொண்டது ?
3. டென்மார்க் எந்தக் கடலிற்கும் எந்தக் கடலிற்கும் இடையில் உள்ளது ? ( இரு கடலிற்கிடையில்).
4. Færøerne ல் அமைந்துள்ள பாராளுமன்றத்தை எப்படி அழைப்பர்
5. டென்மார்க்கிற்கு சொந்தமான 4 தீவுகள் எவை.
6. Færøerne எந்தக் கடலிற்கு அருகில் உள்ளது. அத்துடன் எந்த நாட்டிற்கிடையில் உள்ளது.

சரியான விடைகளை 01.07.96 ற்குப் பிந்தாமல், **Children Channel, Svendsgade 58, 7100 Vejle** என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

# சீதனம்

**என் பெயர்சோபனா, நான் டென்மார்க்கில் கிட்டத்தட்ட 7 வருடங்களாக வசித்து வருகிறேன். இலங்கையில் வசித்தபோது சீதனம் என்ற வார்த்தையோ அல்லது அதன் வாசமோ அறிந்தவளல்ல, ஆனால் இங்கு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீதனம் என்றால் என்ன அர்த்தம் என்பது மட்டுமல்லாது அதன் விளைவுகளைப்பற்றியும் நன்றாக அறிந்திருக்கிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் சீதனம் கொடுப்பது வாங்குவது என்பது ஒரு வியாபாரம். சீதனம் என்ற வார்த்தையினால் எத்தனை பெண்களுடைய வாழ்க்கை சீரழிகிறது, அது மட்டுமல்லாமல் எத்தனையோ இளைஞர்களும் விற்கப்படுகிறார்கள். சீதனம் என்றால் என்ன, அதன் அடிப்படை என்ன, அது எப்படி மக்கள் மத்தியில் பிரபல்யமாகிறது என்பதற்கு விளக்கம் தர நான் இங்கு வரவில்லை, ஏன் அதைப்பற்றி கூறுவதற்கு எனக்கு அறிவுமில்லை அனுபவமும் இல்லை.

இலங்கையில் மட்டுமல்லாது தமிழன் ஏனைய நாடுகளிலும் சீதனம் என்னும் நோய் வளர்ந்து வருகிறது. இது Aids நோயை விட பயங்கரமானது. அதையாவது மருத்துவத்தினால் குணப்படுத்த முயன்றாலும், சீதனத்தை ஆண்டவனே வந்தாலும் தடுக்க முடியாது. காரணம் தமிழனின் இரத்தத்தில் ஊறி விட்ட ஒன்று. ஆதிகாலத்தில் பாமரமக்களையே பாதித்த இந்த விசயம் இப்போது நாகரீகம் தெரிந்த நகர மக்களையும் பயங்கரமாக பாதிக்கின்றது.

சீதனம் என்னும் வார்த்தையும், அதன் சக்தியும் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வருவதற்கு காரணம் நம் முன்னோர்கள் என்கின்றனர் சிலர், ஆனால் இதை என்னால் முழுமையாக ஒத்துக்கொள்ள முடியவில்லை, காரணம் நம் முன்னோர் நமக்கு சொல்லித்தந்த எத்தனையோ நல்ல விடயங்களை நாம் மறந்து விட்டோம், ஆனால் சீதனம் என்னும் வார்த்தையும் அதன் சக்தியும் தான் நம் நெஞ்சை விட்டு அகலாமல் இருக்கிறதா? இல்லை இதை நான் அறவே மறுக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் சீதனம் என்னும் தீ தமிழ்மக்கள் மத்தியில் இன்னும் எரிந்து கொண்டிருப்பதற்கு காரணம் நமது பெண் அடிமைச் சமுதாயம் தான்.

நமது தாய் நாடான இலங்கையில் சீதனம் கொடுப்பதற்கு காரணம், பெற்றோர் பிள்ளைகட்கு வழங்கும் அன்பளிப்பு என்கின்றனர் சிலர். அதாவது கூடுதலாக ஏழ்மைப்பட்டவர்கள் புதிதாக திருமணமான தம்பதியர்க்கு வாழ்க்கையின் முதல் படியை ஆரம்பிக்கும் போது சிரமமின்றி நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக பணம், பொருள், நகை காணிநிலம் என வழங்குவார்களாம். இது நமது பண்பாட்டிலும் ஒன்று என்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனிதாபிமானப்படி பார்த்தால் இதை ஓரளவுக்கு ஒத்துக் கொள்ளலாம் ஆனால் இன்று மனிதாபிமானமின்றி லட்சக்கணக்கில் அல்லவா கேட்கிறார்கள் இதை எப்படி விட முடியும். நமது பண்பாட்டில் ஒன்றாக விளங்கியவற்றை இன்று வியாபாரமாக்கிவிட்டனர் சிலர். இப்படி பாராபட்சமின்றி பெண்களிடம் சீதனம் என்ற வார்த்தையை சுட்டிக்காட்டி பணத்தை எதிர்பார்க்கும் ஆண்களுக்கு நான் ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சீதனம் வாங்குவதனால் ஆண் பெருமைப்படுகிறான், அதைக் கொடுப்பதினால் பெண் அவமானப்படுகிறாள் என்று நினைக்கின்றனர் சிலர், இது தவறு, உண்மை என்னவாயின், ஆண்கள் அவர்களின் விலையைத்தான் கேட்கின்றனரே தவிர பெண்களின் வாழ்க்கைக்கு அல்ல. நானும்ஒரு பெண் என்பதால் பெருமைக்கு சொல்லவில்லை, அடிப்படை ரீதியாக நாம் சிந்தித்துப்பார்த்தால் இது உண்மை என்பது விளங்கும். அதே சமயம் இன்று தானே ஆண்களின் விலையும் ஏறிக்கொண்டே போகின்றது.

குறிப்பாக சொல்லவேண்டும் என்றால் (இந்தியாவில்) ஒரு பெண் பருவமடைந்த பின் வருத்தப்படும பெற்றோர்களை விட பிறந்தவுடனேயே கவலைப்படும் பெற்றோர்தான் அதிகம். அந்த பெண்பிள்ளைளை வைத்து காப்பாற்ற இயலாமல் அச்சிசுவை கொன்று விடுகிறன்றனர். இவர்களும் மனிதர்கள்தானா? இல்லை மிருகத்திலும்விட கேவலமானவர்கள். மிருகத்திற்காவது கருனை இருக்கிறது, ஆனால் தமிழனுக்கு அது அறவே இல்லை. இப்படிப்பட்டவன் எதற்கு ஒரு பெண்ணை மணக்க வேண்டும், பின்பு அவளை தாயாக்கி பிள்ளை பிறந்தவுடனேயே அது பெண் என்றால் கொன்றவிடவேண்டும், இதற்கு திருமணம் செய்யாமலே இருந்திருக்கலாம்.

சந்தையில் காய்கறி விலை கேட்பது போல் ஆகி விட்டது பெண்களின் வாழ்க்கை யார் எதைச்சொல்லி என்ன புண்ணியம். நடப்பது தானே நடக்கும், ஆனால் வாழ்க்கைச் சக்கரம் என்றும் ஓரேமாதிரி சுற்றாது ஆண்களின் அதிகாரம் இன்று என்றால், நாளை பெண்களின் இது நிச்சயம்!

பெண்களை தெய்வாம்சமாக வணங்கியதெல்லாம் அந்தக்காலம், இன்று அந்த கட்டுக்களையெல்லாம் அவிழ்த்து எறிந்து விட்டு துணிவோடு தங்களின் சுதந்திரத்திற்காகவும், சீதனம் என்னும் வலையில் விழாமல் தப்பித்துக் கொள்ளவும் எத்தனையோ பெண்கள் போராடுகின்றனர். இதற்கு வெற்றி நிச்சயம் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களின் வாழ்க்கைக்கு விலை பேசுவதாக நினைக்கும் ஆண்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள், பெண்களிடம் உடம்பை மட்டும் பார்க்காதீர்கள் அதற்குள் இருக்கும் மனதையும் கொஞ்சம் எட்டிப்பாருங்கள். எங்கள் உணர்வுகளுக்கும் மரியாதை கொடுங்கள் என்று உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

*சோபனா சுப்பிரமணியம்*

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

## அறிவித்தல்

யாழ் போதனா வைத்தியசாலை நிவாரண நிதிக்காக டென்மார்க்கிலுள்ள இசைக் குழுவினர்களால் சேகரிக்கப்பட்ட பணத்தின் வரவு செலவு அறிக்கை.

தகவல்: எம்.பி ஆரோக்கியநாதன்

வரவு

| | | | |
|---|---|---|---|
| Herning விழாவின் போது சேகரிக்கப்பட்ட தொகை | | 533770.00 | |
| பின்பு சேகரிக்கப்பட்ட பணம் | | 6250.00 | |
| Middelfart ekstra வரவு | | 1900.00 | |
| Canteen ஏலவிற்பனை | | 3250.00 | |
| வருமதியாவுள்ள பணம் | 13700.00 | | |

செலவு

| | | |
|---|---|---|
| Herning விழாச் செலவு | 5960.00 | |
| København கூட்டம் கார் செலவு | 1060.00 | |
| யாழ் வைத்தியசாலைக்கு 09.10.95 இல் அனுப்பிய தொகை | | 25000.00 |
| கட்டணம் | | 100.00 |
| யாழ் வைத்தியசாலைக்கு 25.03.96 இல் அனுப்பிய தொகை | | 24400.00 |
| கட்டணம் | | 100.00 |

**01.05.96 ல் கையிருப்பு 8550.00**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வரும் விசேட இந்து தினங்கள்

| July (ஆங்கிலம்) | ஆனி (தமிழ்) | விராதி நிரூபணம் |
|---|---|---|
| 11.07.96 | 27 வியாழன் | ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம் |
| 13.07.96 | 29 சனி | சனிப்பிரதோச விரதம் |
| 15.07.96 | 31 திங்கள் | அமாவாசை விரதம் |
| | ஆடி | |
| 19.07.96 | 04 வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| 20.07.96 | 05 சனி | ஆடிப்பூரம் |
| 21.07.96 | 06 ஞாயிறு | ஷஷ்டி விரதம் |
| 26.07.96 | 11 வெள்ளி | ஏகாதசி விரதம் |
| 28.07.96 | 13 ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 30.07.96 | 15 செவ்வாய் | பூரணை விரதம் |
| **August** | | |
| 07.08.96 | 23 புதன் | கார்த்திகை விரதம் |
| 10.08.96 | 26 சனி | வைஷ்ணவ ஏகாதசி |
| 11.08.96 | 27 ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 13.08.96 | 29 செவ்வாய் | ஆடி அமாவாசை விரதம் |
| | ஆவணி | |
| 18.08.96 | 2 ஞாயிறு | நாக சதுர்த்தி விரதம் |
| 20.08.96 | 4 செவ்வாய் | ஷஷ்டி விரதம் |
| 24.08.96 | 8 சனி | ஆவணி மூலம் |
| 25.08.96 | 9 ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 26.08.96 | 31 திங்கள் | பிரதோஷ விரதம் |
| 27.08.96 | 4 செவ்வாய் | ஆவணி ஓணம், நடேசரபிஷேகம் |
| 28.08.96 | 12 புதன் | பூரணை விரதம் |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| September | ஆவணி (தமிழ் ) | விரதாதி நிரூபணம் |
|---|---|---|
| 01.09.96 | 16 ஞாயிறு | சங்கடஹர கணபதி விரதம் |
| 03.09.96 | 18 செவ்வாய் | கார்த்திகை விரதம் |
| 04.09.96 | 19 புதன் | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| 08.09.96 | 23 ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 10.09.96 | 25 செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 12.09.96 | 27 வியாழன் | அமாவாசை விரதம் |
| 16.09.96 | 31 திங்கள் | விநாயகர் சதுர்த்தி விரதம் |

இவ் விஷேட தினங்களுக்கான அட்டவணையைத் தயாரித்து உதவியவர்

ம. கணேசசர்மா BILLUND

பல ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக இலங்கையின் பல பாகங்களில் மிகவும் துன்பப்படுகிறார்கள். இவர்களுக்கு வதிப்பிட வசதியல்லை, உணவுத் தட்டுப்பாடு (ஒரு நேர உணவுகூடக் கிடைப்பதில்லை), இதற்கும் மேலாக நோயினால் பாதிக்கப்பட்டும் வருகிறார்கள்.

இவர்களில் உங்கள் குடும்பத்தினர் அல்லது அத்துடன் உறவினர்களும், சிநேகிதர்களும் அடங்குவார்கள்.

**அவர்களுக்கு உங்களின் உதவி அவசியம் தேவைப் படுகின்றது.**

தமிழ் மக்களுக்கு, பல ஆண்டுகளாக உதவி செய்து வரும், பலகால அனுபவம் கொண்ட டெனிஸ் கிறிஸ்தவ உதவி நிறுவனத் தினூடக, பணத்தை அனுப்பி உதவுவதே ஒரே வழியாகும். இவ் நிறுவனத்திற்கு தமிழர்கள் வாழும் பகுதிகளில் பல நேரடித் தொடர்புகள் உண்டு.

உங்களுக்கு கேள்விகள் இருப்பின்,

Thorbjørn Lorentzen tlf 97 16 42 77 அல்லது து.செல்வக்குமார் 97 12 55 93 அல்லது Gulli Jakobsen tlf . 33152800 (Folkekirkens Nødhjælp) உடன் தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் பணம் செலுத்த வேண்டிய Giro இல. 540 – 0023

**Folkekirkens Nødhjælp, Nøregade 13, DK-1165 København K**

**இன்றே தபாற்கந்தோருக்கு சென்று பணத்தைச் செலுத்தி உதவுங்கள்.**

# அறம் செய்ய விரும்பு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

21 03 84





26 05 88

துகிர்தா துரைசிங்கம்
**Thukirtha Thuraisingam**

துருபரன் துரைசிங்கம்
**Thuruparan Thuraisingam**

பிறந்த தினத்தைக் கொண்டாடும்
இச் சிறார்களை கல்வியிற் சிறந்து விளங்கி நோய் நொடியின்றி சகல
வளங்களும் பெற்று சிறப்புடன்
நீடூழி வாழ்கவென கற்பகம்
வாழ்த்துகின்றது

டயான் ஆரோக்கியநாதன்
**Dajan Arockianathan**

ஜனனி பரமேஸ்வரன்
**Janani Parameswaran**

07 04 93





11 04 87

# Fødselsdagshilsner

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Post besørget blad
7401 HRC 50147

**Tamilsk - Dansk Venskabsforening**
**தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியம்**
**Tamil Danish Friendship Association**
**Postboks 103, DK-7400 Herning, Denmark**
**Tlf & Fax +45 97 12 55 93, Giro 695- 0892**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்